உ

கணபதி துணை

சன்மார்க்க சபை

முத்துவிழா மலர்

1909 - 1999

பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 3,ஆம் நாள்

(20-8-1999)

மேலைச்சிவபுரி

முத்துவிழா மலர்க் குழுவினர்

திரு. **ப.சா. சிங்காரம் செட்டியார்.**
செயலர், சன்மார்க்க சபை

முனைவர் திரு. **பழ. முத்தப்பன்.** முதல்வர்

முனைவர். திரு. **பழ. சிதம்பரம்**
தேர்வுநிலை விரிவுரையாளர்

முனைவர். **ஜே. ரோசுலெட்**
தேர்வுநிலை விரிவுரையாளர்

முனைவர். **க. கனகராசு**
தேர்வுநிலை விரிவுரையாளர்

உ
கணபதி துணை

சன்மார்க்க சபை
முத்துவிழா மலர்

1909 - 1999



பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 3,ஆம் நாள்
(20-8-1999)

மேலைச்சிவபுரி

சன்மார்க்க சபை
மேலைச்சிவபுரி

பேரன்புடையீர், வணக்கம்.

எல்லாம் வல்ல இறையருளால் சன்மார்க்க சபையின்
தொண்ணூறாம் ஆண்டு நிறைவு முத்து விழா
நிகழும் வள்ளுவராண்டு 2030 பிரமாதி ஆவணித்திங்கள்
3,4 தேதிகளில் (20, 21-8-1999 வெள்ளி, சனி)
நிகழ்ச்சி நிரலில் கண்ட வண்ணம் மிகச் சிறப்புற
நடைபெறுகின்றது.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் மற்றும் நற்றமிழ்
நாவலர்களும், பல்துறை வல்லுநர்களும் கலந்து கொண்டு
சிறப்பிக்கின்றார்கள். அனைவரும் வருகை தந்து
விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

மேலைச்சிவபுரி
2-8-1999

இன்னணம்
சன்மார்க்க சபையார்

தொடக்க விழா

நாள் : 20-8-99 வெள்ளிக்கிழமை **காலை : 9.30 மணி**

மங்கள இசை

இறைவணக்கம் : **கல்லூரி மாணவியர்**

வரவேற்புரை : **திரு. சித. பழனியப்ப செட்டியார்**
(சபைத் தலைவர்)

அறிக்கை படித்தல் : **திரு ப.சா. சிங்காரம்.**
(சபைச் செயலர்)

முத்துவிழா நினைவுக் கட்டிடத் திறப்பும்- சிறப்புரையும் : மாண்புமிகு அமைச்சர் உயர்திரு முனைவர் **மு. தமிழக்குடிமகன்** அவர்கள்
(தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து அறநிலையத்துறை)

தலைமையுரையும், மலர்வெளியீடும் : தவத்திரு **பொன்னம்பல அடிகளார்** அவர்கள்
(குன்றக்குடி ஆதீனம்)

மலர்பெற்றுக் கொள்பவர்: **திரு. ப.சா. பழநியப்பச் செட்டியார்** அவர்கள்

சன்மார்க்க சபை நிறுவனர் குடும்பத்தைச் சார்ந்த
அ. சுவாமிநாதன் செட்டியார்,
அ. விசுவநாதன் செட்டியார் மற்றும்
பழ. சிங்காரம் செட்டியார்
ஆகியோரின் திருவுருவப்படங்கள் திறந்து வைத்தல்.

அறிமுகவுரை : திரு **சி.ராம. நாகப்ப செட்டியார்** அவர்கள்
திரு **சித. இராமலிங்கம் செட்டியார்** அவர்கள் .
(தலைவர், கல்லூரிக் குழு)

படத்திறப்பாளர் : தவத்திரு **அடிகளார்** அவர்கள்

கல்லூரிக் குழுவின் முன்னாள் தலைவர் முனைவர். செம்மல்
வ.சுப. மாணிக்கனார் அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைத்தல்

அறிமுகவுரை : திரு **வி. பழனியப்பன்** அவர்கள்
(செயலர், கல்லூரிக் குழு)

படத்திறப்பும் விழாத் தொடக்க உரையும் : முனைவர் உயர்திரு **ஔவை நடராசன்** அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை)

நன்றியுரை : திரு ப.சா. சிங்காரம் (சபைச் செயலர்)

கருத்தரங்கம்

மாலை : 4.00 மணி

இறைவணக்கம்

வரவேற்புரை : **முனைவர் பழ. முத்தப்பன்**
(கல்லூரி முதல்வர்)

தலைமை : **திரு. பெரும்புலவர் பா. நமசிவாயம்** அவர்கள்

பங்கு கொள்வோர்

பதிப்புச் செம்மல், முனைவர்
ச. மெய்யப்பன் அவர்கள் **"நகரத்தாரும் தமிழும்"**

பேராசிரியர்
கதி. சுந்தரம் அவர்கள் **"நகரத்தாரும் கல்வியும்"**

புலவர் மாமணி
மா. முத்துராமன் அவர்கள் **"நகரத்தாரும் பண்பாடும்"**

தமிழறிஞர்
பழ. கருப்பையா அவர்கள் **"நகரத்தாரும் சமயமும்"**

நன்றியுரை : **முனைவர் பழ. சிதம்பரம்.**

சமயப்பேருரை

வரவேற்புரை : திரு. **சி.சாமிநாதன்**

தலைமை : திரு. **சா. அண்ணாமலை செட்டியார்** அவர்கள்

பேருரை : திருமதி. பேராசிரியை. **இளம்பிறை மணிமாறன்** அவர்கள்

பொருள் : **"நலம் தரும் பதிகங்கள்"**

நன்றியுரை : திரு. அ.சாமிநாதன்

கலைநிகழ்ச்சி

இரவு : 10.00 மணி

வழங்குவோர் : **அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரி மாணவர்கள்**

21-8-1999, சனிக்கிழமை **இரண்டாம் நாள்** காலை : 9.30 மணி

கவியரங்கம்

இறைவணக்கம்

வரவேற்புக்கவிதை : திரு. கவிஞர்சே. **கனகசபை** அவர்கள்

தலைமை : திரு. **முனைவர் அர.சிங்காரவடிவேலன்** அவர்கள்

உய்வு தரும் உறுதிப் பொருள்கள்

"**அறம்**" : திரு பொற்கிழிக் கவிஞர்**சொ.சொ.மீ. சுந்தரம்** அவர்கள்

"**பொருள்**" : திரு பேராசிரியர் முனைவர் **சுப. கதிரேசன்** அவர்கள்

"**இன்பம்**" : திருமதி **கண்ணம்மை அரங்கநாதன்** அவர்கள்

"**வீடு**" : திரு புலவர் **அழ. அண்ணாமலை** அவர்கள்

நன்றியுரை : திரு புலவர் **சித. சுப்பிரமணியன்.**

பட்டமளிப்பும் பாராட்டும்

வரவேற்புரை : திரு. **ப.சா. சிங்காரம்** அவர்கள்

தலைமையும் பட்டமளிப்பும் : நீதியரசர் மாண்புமிகு **அரு. இலக்குமணன்** அவர்கள்
தலைமை நீதிபதி, கேரள உயர்நீதி மன்றம்.

பட்டமளிப்போரை அறிமுகம் செய்தல் : திரு புலவர்**ஆ. பழனி** அவர்கள்

"செம்மல் பட்டம் பெறுபவர் : திரு **சுப. அண்ணாமலை** அவர்கள்

"செந்தமிழ் மணி" பட்டம் பெறுபவர் : திரு **ச. மெய்யப்பன்** அவர்கள்

ஏற்புரை : **பட்டம் பெற்றோர்**

பாராட்டு வழங்கல் அறிமுகஉரை : முனைவர் திரு **க. தியாகராசன்** அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பாராட்டு பெறுபவர் அறிமுகஉரை : திரு **இராமசெல்வம்** அவர்கள்
உரிமையாளர், ஷட்டில் வீவ்ஸ் இன்டர்நேஷனல் - சென்னை

நன்றியுரை : திரு. **சி. நாகப்பன்** அவர்கள்

பட்டி மண்டபம்

மாலை : 4.00 மணி

வரவேற்புரை : புலவர் திரு. **சி.சொக்கலிங்கம்**

நடுவர் : நகைச்சுவை அரசு திரு.பேராசிரியர்

கண. சிற்சபேசன் அவர்கள்

பொருள் : **"பாத்திரப்படைப்பில் பெருமை பெற்ற காப்பியம்"**

சிலப்பதிகாரமே!	***கம்பராமாயணமே!***
திரு. **த. இராசாராம்**	திருமதி. **இராம.சௌந்தரவள்ளி**
திருமதி. **விசாலாட்சி சுப்பிரமணியன்.**	திரு. **ப. இராமன்**
திரு. **க. கனகராசு**	திரு. **தா. மணி**

நன்றியுரை : திரு. **வி. முருகப்பன்**

கலைநிகழ்ச்சி

இரவு : 7.00 மணி

வழங்குவோர் : **கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மாணவியர்**

இரவு : 10.00 மணி

புரட்சிக்கனல் - நாடகம்

வழங்குவோர் : **கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்.**

இயக்கம் : ந. முருகேசபாண்டியன்.

திருவருள் திரு

தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி. 630 206

முத்து விழா வாழ்த்து மடல்

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை, தமிழ் கூறும் நல்லுலகில் புகழ் சான்ற சபையாகும். இத் திருச்சபையின் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி உருவாக்கிய தமிழ்ப்புலவர்கள் , தமிழ்ச் சான்றோர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள். தமிழ் வளர்ச்சிக்கு இச்சபை ஆற்றியுள்ள பணி வரலாற்றுச் சிறப்புடையது. இந்த சன்மார்க்க சபையின் தொண்ணூறு ஆண்டு நிறைவு விழா நடைபெறவிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இந்த நிறுவனத்தைப் புரந்து வந்த புரவலர் பெருமக்களுக்கும், செந்தமிழ்க் கல்லூரியின் வழி, சிறந்த தமிழ்ப் பணி ஆற்றியுள்ள பேராசிரியர் பெருமக்களுக்கும், நமது உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சபையின் நிகழ்காலத் தலைவர் திரு. சித. பழனியப்பன் அவர்களுக்கும், செயலர் திரு ப.சா. சிங்காரம் அவர்களுக்கும், சபை உறுப்பினர்களுக்கும் நமது உளமார்ந்த பாராட்டு; வாழ்த்துக்கள்.

தொண்ணூறு ஆண்டு நிறைவுறும் சபை, மேலும் பல்லாண்டுகள் சிறந்து செந்தமிழும், சிவநெறியும் வளர்த்துப் புகழ் ஓங்கத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

பொன்னம்பல தேசிகர்.

கயிலை மாமுனிவர் வித்துவான்

சாந்தலிங்க இராமசாமியடிகள்

பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்) கோவை - 10

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தொண்ணூறு ஆண்டு

நிறைவு விழா வாழ்த்துப்பா

பண்புடன் பத்திசேரும் நகரத்தார் பணியாலோங்கித்
தண்டமிழ் வளர்க்கும் மேலைச்சிவபுரி வளர்கல்லூரி
மண்புகழ் சன்மார்க்க சங்கத்தார் வளர்நற்றூய்மை
உண்மையாம் கடமையாலே உயர்வுற வாழ்த்துகிறோம்.

திருக்கோயில் புதுக்கும் பண்பால்சிறந்திட்ட நகரத்தார்க்குப்
பெருமைசேர் பழனியப்பன் பேணும்சன்மார்க்க மன்றம்
திருஉரு தம்பி அண்ணாமலை பணிசேரச் செய்தே
அருமையார் தமிழ்ச்சான்றோர்க்கு ஆக்கங்கள் செய்தார் பண்பால்.

வளமருள் கணேசர்பேரால் வாய்த்த செந்தமிழ்க்கல்லூரி
தளர்விலா துயரச்செய்தார் பண்டிதமணியாம் சான்றோர்
அளப்பரும் வ.சுப. மாணிக்கம் அருந்தமிழ்ப் பணியாலோங்கி
விளக்கமுற்றிடு சான்றோரால் விரிந்து பல்லாண்டு வாழி!

வேண்டும் தங்களன்பு,

சாந்தலிங்க இராமசாமி அடிகள்

ஸ்ரீ லஸ்ரீ நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் மடாலயம். கோவிலூர் -630 307

சீரிய செந்தமிழின் வளர்ச்சியை மனத்தகத்தே கொண்டு, என்றுமுள தென்தமிழின் ஏற்றத்தை உலகறிவான் வேண்டி, இலக்கணப் புலவர் சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார், பண்டிதமணி கதிரேசனார் ஆகியோர் நெறி காட்டத் தோன்றிய மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை தனது தொண்ணூறாம் ஆண்டு நிறைவு முத்துவிழாவினைக் காண்பதறிந்து பேருவகை கொள்கிறோம்.

உயர்தனிச் செம்மொழி அறிஞர்களை இனங்கண்டு, 'மகா வித்துவான் , பண்டிதமணி', போன்ற பட்டங்களைப் பாரறிய வழங்கிச் சிறப்பிக்கும் பேறு பெற்ற இச்சன்மார்க்க சபைக்குப் பெருநாவலர் பலர் வந்து வந்து செந்தமிழ் நல்லுரைகள் பல வழங்கிச் சிறப்பித்துள்ள செய்தி இச்சபையின் தொண்டுக்கு மணிமுடி சூடியது போலாம்.

இன்றைய நாளில் இச்சபை மிக வளர்ந்து, விரிந்த அளவில் கல்வித் தொண்டு புரிந்து வருவது கண்டு மெத்த உவகை கொள்கின்றோம். இத்தொண்டு மேலும் மேலும் வளர , எல்லாம் வல்ல கோவிலூர், திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ சத்குரு நாதன் துணை.

. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பி.எச்.டி.,
,மொழி, தமிழ்ப் பண்பாடு,
ும் மற்றும்
லயத்துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

வாழ்த்துரை

மேலைச்சிவபுரியில் திருமிகு அரசஞ்சண்முகனார் அவர்களின் சீரிய தலைமையில் திரு. பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார் அவர்களின் வழிகாட்டலில் தோற்றுவிக்கப்பட்ட சன்மார்க்கசபை வள்ளலாரின் மனித நேயக் கருத்துகளைக் குமுகாயத்தில் விதைக்கும் முயற்சியில் எவ்விதத் தளர்ச்சியும் இன்றித் தொடர்ந்து தொண்ணூறு ஆண்டுகளாகச் செயலாற்றி வரும் செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தலைவர் திரு. சித. பழனியப்பன் , செயலர் திரு. ப.சா. சிங்காரம் ஆகிய இருவரும் ஒருங்கிணைந்து குமுகாய விழிப்புணர்வுப் பணிகளைச் செம்மையாகத் தொடர்ந்திடவும் , சபையின் தொண்ணூறாம் ஆண்டு மலர் சிறப்புற மலரவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்.

ஓம்

ஓம் நமச்சிவாய வாழ்க!

தமிழ் வளர்த்து வாழ்க!

சௌந்தரா கைலாசம், தேனாம்பேட்டை சென்னை - 18

அருந்தமிழின் திருத்தொண்டே தமதரிய வாழ்வாய்
அனுதினமும் கருதியபண் டிதமணியார் அந்நாள்
பொருந்துமொரு வழிகாட்ட அரசஞ் சண்முகனார்
பொறுப்பேற்றுத் தலைமைகொள மேலைச்சிவ புரியில்
அருமையுறத் தோன்றிய சன்மார்க்க சபை இந்நாள்
அழகொளிர முத்துவிழாக் காண்கிறது மகிழ்வாய்!
பெருமையுறத் தமிழ்வளர்த்துப் பெரியபுக ழோடு
பேருலகில் சன்மார்க்க சபைஇனிது வாழ்க!

எத்தனையோ சான்றோர்கள் தமையழைத்து வந்தும்
இனிமையுயர் பேச்சுக்களை அவர்வழியே தந்தும்
எத்தனையோ மாணவர்க்குச் செந்தமிழைப் பயிற்றி
ஏற்றமுற அவர்வாழ்வில் விளக்கேற்றி வைத்தும்
எத்தனையோ அறிஞர்கட்குப் பட்டங்கள் தந்தும்
என்றென்றும் தமிழ்ப்பணிகள் செம்மையுறப் புரிந்தும்.
இத்தரையில் விளங்கிடுசன் மார்க்கசபை இன்னும்
எண்ணற்ற காலமிறை அருள்பெரு கவாழ்க!

நாதன் தாள் வாழ்க.

முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)
துணைவேந்தர்.
சென்னைப் பல்கலைக்கழகம்.
சேப்பாக்கம் - சென்னை - 600 005

வாழ்த்துரை

மேலைச்சிவபுரியில் இயங்கிவரும் சன்மார்க்க சபையின் தொண்ணூறாம் ஆண்டு விழா வரும் ஆகஸ்டுத் திங்களில் நடைபெறவிருப்பதையும், அவ்வமயம் விழா மலர் வெளியிடுவதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சி.

பல கல்விப் பணிகள் மற்றும் சமுதாயத் தொண்டுகளாற்றிவரும் சன்மார்க்க சபையின் நடவடிக்கைகள் மேலும் சிறந்தோங்க எனது வாழ்த்துக்கள்.

பொன். கோதண்டராமன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் மு. சாலிகு
துணைவேந்தர்.

பல்கலைநகர்.
மதுரை - 625 021

வாழ்த்துமடல்

மேலைச்சிவபுரியில் அமைந்துள்ள சன்மார்க்க சபையின் தொண்ணூறு ஆண்டு நிறைவு முத்து விழா இவ்வாண்டு ஆகஸ்டு 20, 21-ல் நடைபெறவுள்ளது அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். முதுபெரும்புலவர் பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், முதறிஞர் வ.சுப. மாணிக்கனார் போன்ற பெரும் அறிஞர்கள் இச்சபையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தனர் என்ற பெருமை இச்சபைக்கு உண்டு. மேலும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், திரு விபுலானந்த அடிகளார் போன்ற பெரும் தமிழ்ப் புலவர்கள் இச்சபைக்கு வந்திருந்து சிறப்பித்துள்ளனர். இச்சபை பாராட்டி அளித்த பட்டங்களே பல தமிழறிஞர்களின் இயற்பெயருக்கு வளம் சேர்த்தன என்பது கண்கூடு.

பள்ளிகள் நிறுவிக் கல்விப்பணியாற்றுவதில் சன்மார்க்க சபை செவ்வனே செயல்பட்டு வருவது சபையினரின் கல்வித்தொண்டின் ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

சன்மார்க்க சபை தமிழுக்காகவும் தமிழர் வளர்ச்சிக்காகவும் மேலும் முனைந்து செயல்பட ஆக்கமும், ஊக்கமும் கொண்டு உழைக்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

மு. சாலிகு.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி -627 012

க.ப. அறவாணன்
துணை வேந்தர்

வாழ்த்துக்கள்

மேலைச்சிவபுரியில் திருமிகு அரசஞ்சண்முகனார் அவர்களின் சீரிய தலைமையில் திரு பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்களின் வழிகாட்டுதலில் 13-05-1909 ஆம் நாளன்று தோற்றுவிக்கப் பெற்ற சன்மார்க்க சபையின் 90 ஆம் ஆண்டு விழா எதிர்வரும் ஆகஸ்டு 20, 21 ஆகிய நாட்களில் நிகழ இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்சியடைகிறேன்.

விழாவை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிடப்பட இருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

அறிஞர்களின் சொற்பொழிவுகள், தமிழ்க் கல்லூரிகளைத் திறத்தல், சைவ சமய உண்மைகளைப் பரப்புதல், சிறந்த நூல்களை வெளியிடுதல், அறிஞர்களுக்கு உயர் பட்டங்களை வழங்குதல், கல்விப் பணிகள் ஆற்றுதல் முதலான தமிழ் இலக்கியப் பணிகளைக் குறிக்கோளாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுவரும் இச்சபையின் செயற்பாடுகள் பாராட்டத் தக்கவை; போற்றத் தக்கவை.

விழா இனிதே நிகழவும், மலர் சிறப்பாக வெளிவரவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

க.ப. அறவாணன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

முனைவர் **கதிர். மகாதேவன்**
துணைவேந்தர்.

அன்புடையீர்,

வணக்கம். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் தொண்ணூறு ஆண்டு நிறைவு முத்து விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

சன்மார்க்க சபை வழிகாட்டலில் மிகச் சிறப்புடன் இயங்கிவரும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் தமிழ்ப் பணி பாராட்டிற்குரியது.

சைவ நெறி, தமிழ்ப் பண்பாடுகளை உலகிற்குப் பரப்பும் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை பன்னூறாண்டுகள் நின்று நிலவி மேன்மேலோங்கப் பெரிதும் வாழ்த்துகிறேன்.

முனைவர் **கதிர். மகாதேவன்**

திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம்

மேலரண்சாலை, திருச்சி-620 008

ஆவி. ஆவிச்சி செட்டியார்.
அமைச்சர்.

பேரன்புடையீர்!

வணக்கம். தாங்கள் அனுப்பிய தொண்ணூறாண்டு நிறைவு முத்துவிழா கடிதம் கண்ணுற்றேன். திரு.சித. பழனியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறும் சன்மார்க்க சபை திரு. அரசஞ்ண்முகனார், திரு. பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார் ஆகியோர் வழிகாட்டலில் தோன்றியது என்பதை அறிந்து மகிழ்கின்றேன். செட்டிநாட்டில் பல இடங்களில் சன்மார்க்க சங்கங்கள் தோன்ற உறுதுணையாக இருந்தது என்பதை அறிவேன்.

தமிழகத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள், பண்டிதர்கள், முனைவர்கள் சன்மார்க்க சங்கத்தில் சொற்பெருக்கு ஆற்றியதை நினைந்து அகமகிழ்கிறேன். செட்டி நாட்டு அரசர்கள் கலைத் தந்தை கரு. முத்து தியாகராச செட்டியார் அவர்கள் , கலையன்னை இராதா தியாகராசன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் , பக்தவச்சலம் அவர்கள், சன்மார்க்க சபைக்கு வருகை புரிந்த செய்தி , சிறப்பு மிக்கது.

கணேசர் தொடக்கப்பள்ளி, மழலையர்பள்ளி, கணேசர் செந்தமிழ்க்கல்லூரி இவைகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. என்றால் அதற்குத் துணையாகத் தலைவர் திரு. சித. பழனியப்பன் அவர்களும், செயலர் திரு.ப.சா. சிங்காரம் அவர்களும் ஆவார்கள்.

சன்மார்க்க சபை தொண்ணூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் சிறப்பாக மேலைச்சிவபுரியில் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகிறது. மேன்மேலும் வளர்ந்து நூற்றாண்டுவிழாவைக் காண இறைவனை வாழ்த்துகிறேன்.

ஆவி. ஆவிச்சி செட்டியார்.
அமைச்சர்.

நூறாண்டும் காணுகவே

கவிஞர் சே. கனகசபை பி.ஏ.,

இருபத்தைந் தாண்டெனும் இளமையிலே வெள்ளிவிழா!
ஈடில்லா வளர்ச்சி எனும் ஐம்பதிலே பொன்விழா!
அறுபதிலே மணிவிழா பவளவிழா முத்துவிழா
அடுக்கடுக்காய் விழாக்காணும் சன்மார்க்கப் பெருஞ்சபையே!
பெருமையுடன் தமிழ்ப்பணிகள் பலபுரிந்தாய்! ஆங்கிலத்தைப்
பின்னிறுத்தித் தமிழ்த்தாயை முன்னிருத்திப் புகழ் சேர்த்தாய்!
அரும்புலவர் பட்டத்தால் அணிவகுக்கும் மன்றமென
அறிஞர்களை உருவாக்கி அரும்சாதனை புரிந்தாய்!

பழனியப்பர் இளவல் அண்ணாமலை என்னும் பேராளர்!
பண்பாட்டுக் காவலராம் சைவத்தின் காதலராம்!
எழில்மேலைச் சிவபுரியின் தவம் செய்த தவமாவார்!
இணையில்லாத் தனவணிகர்! அவர் நண்பர் கதிரேசர்
பழச்சுவை போல் தமிழ்ச்சுவையைப் பருகவைக்கும் மணியாவார்!
பக்திமிகு புரவலரைப் பைந்தமிழால் ஆட்கொண்டு
வழிவழியாய்ச் சைவமுடன் தமிழ்காக்கும் சபைகண்டார்!
மாவீரர் மூவருமே வரலாற்றில் இடம் கொண்டார்!

பொன் எழுத்தாய் மைல்கல்லாய் நிலைத்துவிட்ட பழநியப்பர்
"பொய்யாகும் இவ்வுடலம் மெய்யாகும் சபை ஒன்றே
எந்நாளும் காத்திடுக தளராது சபையை" என
இளவல்தமக் கிட்டதொரு கட்டளையை என் எண்போம்!
அன்னாரின் மரபினர்கள் ஆலின்மர விழுதாக
அருஞ்சபையைக் காக்கின்ற பெரும்பணியைத் தொடர்கின்றார்!
முன்னாளின் பழமையொடும் இந்நாளின் புதுமையொடும்
முத்துவிழாக் கண்ட சபை நூறாண்டும் காணுகவே!

உ
சிவமயம்

சன்மார்க்க சபைக்கு வாழ்த்து

முனைவர் சுப. அண்ணாமலை

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு இணையாகச் செட்டிநாட்டுத் தமிழ்ச் சங்கம் என்று சொல்லுமாறு செந்தமிழ்ப் பணியும், சைவப்பணியும் சிறப்புற ஆற்றி வருகின்ற மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தொண்ணூறாவது ஆண்டு நிறைவு முத்து விழாவைக் கொண்டாடவிருப்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன்.

பார்புகழும் பண்டிதமணி இச்சபைக்குத் தாயும் சேயும் ஆவார். அவரது அறிவுறுத்தலால் தோற்றம் கொண்ட இச்சபை அவருடைய துணைமையோடு வளர்ந்தது, அவர் இச் சபையால் வளர்ந்தார்.

இத் தொண்ணூறு ஆண்டுகளில் எண்ணரும் தமிழ்ப் புலவர்களை உருவாக்கித் தமிழ்ப் பணி செய்து வரும் இச்சபையும் இதனைச் சார்ந்த செந்தமிழ்க் கல்லூரியும் சென்ற ஆண்டுகளில் புகழ் பெற்ற தமிழறிஞர்கள் அனைவரின் வருகையாலும் பெருமையும் பெருமிதமும் பெற்றுத் திகழ்கிறது.

மதிப்பிற்குரிய வ.பழ.சா. குடும்பத்தினர் இச்சபையின் புரவலர்களாகத் தொடக்கம் முதல் இருந்து சபை சிறிது அயர்வுற்ற காலங்களில் கூடத் தாம் அயராது இருந்து சபையைக் கட்டிக் காத்து வந்துள்ளார்கள். நகரத்தார்கள் தமிழின் மீதும் சைவத்தின் மீதும் வைத்தள்ள ஆராக்காதலுக்கு இச்சபை ஒரு நற்சான்றாகும்.

பண்டிதமணியை அடுத்துச் செம்மல் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், டாக்டர் தமிழண்ணல், திரு சித. பழனியப்பன் செட்டியார் ஆகியோர் இச்சபையின் தலைவர்களாக இருந்து ஆற்றிய, ஆற்றிவரும் அரும்பணி பாராட்டற்குரியது.

செந்தமிழ்க்கல்லூரி இன்று வணிகவியல், ஆட்சியியல், கணினியியல் போன்ற பிற கலைகளையும் கற்பித்து ஒரு நிறை நிலைக் கல்லூரியாக விளங்குவது மகிழ்ச்சிக்குரியது.

செட்டிநாட்டுக்கு அணிகலமாகத் திகழும் சன்மார்க்க சபையும் கல்லூரியும் பல்லாண்டு பல்லாண்டு பாங்குறப் பணியாற்றி வெல்க, சிறக்கவென வாழ்த்துகிறேன்.

அன்பன்,

முனைவர் சுப. அண்ணாமலை

லயன்ஸ் கிளப்

திருச்சி

MJF. Lion லெ. நா. லெக்ஷ்மணன் B.E.,
District Governer

வாழ்த்துரை

மேலைச்சிவபுரியில் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் சன்மார்க்க சபையை ஆரம்பித்து வளர்த்து இன்று கல்லூரி கண்டுள்ள வ.பழ.சா. குடும்பத்தினர் செய்துள்ள தமிழ்த் தொண்டும், சமுதாயத் தொண்டும் இந்தப் பகுதியில் பிறந்துள்ள ஒவ்வொருவரும் அவசியம் நினைந்து நினைந்து பாராட்ட வேண்டிய ஒரு கடமையாகும்.

இக்குடும்பத்தினர் இப்பகுதியில் இத்தொண்டைத் துவக்காது இருந்திருப்பின், செந்தமிழ், நற்றமிழ் , அழகிய தமிழ் இப்பகுதியில் நிச்சயம் வளர்ந்திருக்காது. நல்ல பல தமிழ் அறிஞர்கள் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்க மாட்டார்கள்.

செட்டி நாட்டு வட்டகையில் இப்பகுதி தமிழ்வளம் செழிக்கக் காரணமாக இருந்த இக்குடும்பத்தினர் வாழையடி வாழையாக வளம் பல பெற்றுச் சிறப்புற்று வாழ நெய் நந்தி வாழும் வேந்தன்பட்டி பொதுமக்கள் சார்பாக, அரிமா மாவட்டத்தின் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறேன்.

இப்படிக்கு
MJF. Lion லெ. நா. லெக்ஷ்மணன் B.E.,

சன்மார்க்க சபையாம் தாயே! வணங்குகின்றேன்

முத்தமிழ்மணி - பேராசிரியர் - **கதி. சுந்தரம்.**

வள்ளலவன் பாரியவன் பறம்பு நாட்டின்
வண்மைமிகும் நல் குலத்தார், சபையைத் தந்த
உள்ளமுயர் வ.பழ.சா. குடும்பம் வாழ்க!
உலகுபுகழ் சிவநெறியைப் போற்றிக் காக்கும்
தெள்ளுகுல மாமணிகள் வாழ்க! வாழ்க!!
தென்பாண்டி முத்துக்கள் வாழ்க! வாழ்க!!
சொல்லரிய பேருவகை துள்ளிப் பாய
தூயதமிழ்ப் பாட்டிசைத்தேன் வாழ்க! வாழ்க!! 1

சன்மார்க்க சபை என்னும் தாயே வாழ்க!
தரணியெல்லாம் நின்தொண்டே தழைத்து வாழ்க!
முன்பிறவித் தவத்தாலே உன்னைக் கண்டேன்.
முக்கனியாம் முத்தமிழைத் தந்தாய் ஆண்டாய்!
என் உயிருள் கலந்துஉள்ளாய் ஏற்றம் மிக்க
எழிற்சுடரே! அருட்தாயே! வணங்குகின்றேன்.
நின்னுடைய பேரருளை மறக்கல் ஆமோ!
நினைக்கின்றேன் ஞெகிழ்கின்றேன் உருகுகின்றேன். 2

கல்மனமும் கரைந்துருகக் கல்வி நல்கும்
களஞ்சியமாம் ஆசிரியர் சபையில் நின்றே
சொல்லுக்குச் சொல்லழகு பொருந்தக் காட்டித்
தூயதமிழப் பக்தியிலே ஆழ்த்தி விட்டார்.
எல்லையிலா அவருடைய புலமை போற்றி
எழில்மிக்க திரு அடிகள் வணங்குகின்றேன்.
நல்லதொரு சன்மார்க்க சபையில் கற்க
நான்பெற்ற பேறதுவே நற்பேறாகும்..! 3

புரவலர்கள் திரளாகக் கூடி மன்றில்
புலவரையே போற்றுகின்ற காட்சிகண்டேன்
பிற நாட்டு மாணவர்கள் சபைக்கு வந்தே
பீடு மிக்க தமிழ்பயிலும் காட்சி கண்டேன்.
அறம்பேசும் ஆசிரியர் நுட்பம் மிக்க
அழகு தமிழ் விரிக்கின்ற காட்சி கண்டேன்.
சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி சபையாம் எங்கள்
செந்தமிழ்த்தாய் ஆரியத்தை வணங்குகின்றேன்.! 4

இரவதனில் துயில்இன்றிப் படித்து நிற்பார்
எப்போதும் காப்பியங்கள் பேசி நிற்பார்
உறவுகளை மறந்தாலும் தமிழை மட்டும்
ஒருபோதும் மறந்தறியா உள்ளம் கொண்டார்!
திறமான கவிமழையைப் பொழிந்து நிற்பார்
சிந்திக்க இனிக்கின்ற கருத்துச் சொல்வார்
அருமை மிகு மாணவராம் நண்பரோடே
அன்றுபயில் காலம்தான் வருமோ! அய்யா! 5

பண்டிதர்க்கு மாமணியாய் தலைமையேற்கும்
பார்புகழும் கதிரேசர் பின்னரிங்கே
எண்டிசையும் போற்றுகின்ற மலரைப் பெற்ற
எழுதிறன்சேர் மாணிக்கர் சான்றோர் மற்றும்
நன்னெறிக்கே பணிபுரியும் அன்பர் நண்பர்
நாடுபுகழ்ச் செல்வரெலாம் என்றும் நல்ல
உன் புகழைக் காக்கின்ற காட்சி கண்டேன்.
உயர்சபையே! வணங்குகின்றேன் வாழ்க! வாழ்க!! 6

ஆலமர விழுதுகளாய் அறிஞர் உள்ளார்
ஆண்டுபல ஆண்டுபல சென்றபோதும்
காலமெல்லாம் உன்புகழைக் காத்து நிற்பம்
கலைபயிலும் மாணவர்க்கே ஞானம் சொல்வார்
சிலை மிகும் நற்கல்வி புகட்டி நிற்பார்
சிவநெறியும் தமிழ்நெறியும் வளர்த்து நிற்பார்
ஞாலமெல்லாம் நின்புகழே வளர்க வாழ்க!
நல்ல தமிழ் முதற்சபையே வணங்குகின்றேன். 7

சித்தத்தின் விகாரமெனும் கலக்கம் மாற்றி
தெளிவு மிகு மெய்யுணர்வை வழங்கி என்றும்
வித்தகராம் தேவர்க்கே பணியைச் செய்யும்
வீறுபெறு ஞானநெறி ஊட்டும் இன்ப
முத்துவிழாக் காணுகின்ற சபையே வாழ்க!
மொழிவளர்க்கும் விழிச் சுடரே! வாழ்க! வாழ்க!
தித்திக்கும் செந்தமிழாம் அமுதம் உண்போம்
திக்கெட்டும் தமிழ்வளர்த்தே பெருமை காப்போம். 8

சன்மார்க்க சபை இதனின் மரமும் பாடும்
சார்ந்திருக்கும் புல்கூட தமிழை ஆயும்
என்னைப்போல் எளியவர்க்கும் ஞானம் ஊட்டி
எழுந்துசெல் நீவெற்றிபெறு என்றே நன்றாய்
இன்பமிகு செடிகொடிகள் இசைத்தே ஆகும்
எண்ணரிய பெருமைமிகும் சபையே! தாயே!
குன்றின் மேல் விளக்காக என்னைச் செய்தாய்!
கோபுரங் கொள் ஆலயத்தின் அன்னை வாழ்க.!

குறள் வெண்பா

பணிசெய் பெருமக்கள் பார்போற்ற வாழ்க!
அணி செய்தேன் வாழ்க அருள்!!

பேராசிரியர் **க. தியாகராஜன்** எம்.ஒ.எல். பிஎச்.டி
தமிழியல் துறைத் தலைவர்
இந்திய மொழிப்புல முதன்மையர்
ஆட்சிக்குழு உறுப்பினர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர். 608 002

பேரன்புடையீர்!

வணக்கம். சன்மார்க்க சபையில் தொண்ணூறு ஆண்டு நிறைவு முத்துவிழா மடல்கண்டு மகிழ்ந்தேன்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
....
அன்னயாவினும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல். என்றான் தேசியக்கவி பாரதி. புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய மேலைச்சிவபுரியில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே சமயமும் தமிழும் தழைத்தோங்க ஏழை எளியவர்கள் மத்தியில் கல்வியில் விழிப்புணர்ச்சியூட்டக் கருதி சன்மார்க்க சபையைத் தோற்றுவித்து அதன்வழி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கானவர்களுக்கு அறிவுநலம் நல்கி தமிழ் உணர்வையும் மேம்பாட்டையும் வளம் பெறச் செய்த **வ.பழ.சா குடும்பத்தினர்** என்றும் நன்றியுடன் போற்றத் தக்கவர்கள் ஆவார்கள்.

இச்சபையை நிறுவத்தூண்டிப் பல்லாற்றானும் துணைபுரிந்த என் தந்தையார் முதுபெரும் புலவர் சைவசித்தாந்த வித்தகர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் தமிழ்த்தொண்டு என்னை மகிழ்விக்கின்றது. பண்டிதமணியாரால் சபையும் சபையால் பண்டிதமணியாரும் பீடும் புகழும் பெற்றமை மேன்மேலும் இன்புறுத்துகிறது.

பண்டிதமணியாரைத் தொடர்ந்து செம்மல் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரும் தமிழகம் போற்றும் தமிழ்ப்பேரறிஞர் முனைவர் தமிழண்ணலாரும் சபையில் பன்முக வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டிற்கும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.


சமய உண்மைகளைப் பரப்பி, அறிஞர் பலருக்குப் பட்டம் வழங்கி ஊக்குவித்து தமிழ் மாணவர்களின் தமிழ் உணர்வினை வளம் பெறச் செய்து தமிழ் இனத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் மேலோங்கத் தொண்டாற்றும் சன்மார்க்க சபை முத்துவிழாவுடன் நூற்றாண்டு விழாக் கொண்டாடி மகிழத் தில்லைக் கூத்தன் திருவருளை வேண்டுகின்றேன். நன்றி.

அன்புடன்,
க. தியாகராசன்.

திரு. வெ. வேங்கடராம ஐயரவர்கள்

வாழ்த்துப்பா

செய்யசௌ மியவாண்டு சித்திரைத் திங்களில்
திகழுமுப் பத்தொன் றினில்
தெய்வமொழி யானதமிழ் சைவநெறி யானதிரு
செவ்வனம் புவியில் வளர
ஐயனைங் கரமூர்த்தி திருவருள் துணைகொண்
டமைத்தசன் மார்க்க சபைதன்
அருமைமிகு பொன்விழாப் பெருமைதரு நிறைவெய்தி
ஆன்றோர்தம் ஆசி பெறவும்
வையமீ தித்திருப் பணிபுரியும் அன்பர்கள்
வாழையடி வாழை யெனவே
வளரவரு செல்வமும் ஒளிரவரு கீர்த்தியும்
வாணாளும் நன்று பெறவும்
துய்யனே! சிவகாமி மகிழவரு மெய்யனே!
சொல்லுமிச் செய்தி யெல்லாம்
தொடுவார் செவிகொண்டு பீடுசால் வரமுதவு
துரிய நடராச மணியே!



அண்ணல் வ.பழ.சா. பழநியப்ப செட்டியார் அவர்கள்
சபை நிறுவிய முதல் தலைவர்



இளவல் வ.பழ.சா. அண்ணாமலை செட்டியார் அவர்கள்
சபையின் இரண்டாவது தலைவர்



உயர்திரு. மகா மகோபாத்தியாய பண்டிதமணி
மு.கதிரேசச் செட்டியார் அவர்கள்
சபையின் தோற்றத்திற்கு உறுதுணைவர்



வ.பழ.சா.பழ. சாமிநாதன் செட்டியார் அவர்கள்
சபையின் மூன்றாம் தலைவர்



வ.பழ.சா.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்
சபையின் நான்காம் தலைவர்




வ.பழ.சா.அ. சாமிநாதன் செட்டியார் அவர்கள்
முன்னாள் சபைத்துணைத் தலைவர்




வ.பழ.சா.அ. விசுவநாதன் செட்டியார் அவர்கள்
முன்னாள் சபைத் தலைவர்



ஆ. நாகப்ப செட்டியார்
முன்னாள்சபை செயலர்



வ.பழ.சா.பழ.சிங்காரம் செட்டியார்
முன்னாள்சபை உறுப்பினர்



முனைவர். செம்மல் வ.சுப.மாணிக்கனார்
முன்னாள் கல்லூரிக் குழுத் தலைவர்




சி.ராம. இராமசாமி செட்டியார்
முன்னாள்கல்லூரிக்குழு உறுப்பினர்




ப.சா. பழனியப்பச் செட்டியார்
உயர்மட்டக்குழுத் தலைவர்



அ.சா. அண்ணாமலைச் செட்டியார்
வளர்ச்சிக் குழுத் தலைவர்




வீர. காசிவிசுவநாதன் செட்டியார்
உயர்மட்டக்குழு உறுப்பினர்



சித. பழனியப்பச் செட்டியார்
சபைத்தவைலர்



ப.சா.சிங்காரம் செட்டியார்
சபைச் செயலர்



பழ.சி.சொக்கலிங்கம்
சபைத்துணைத் தலைவர்



அ.வி. முருகப்பன்
சபைப்பொருளாளர்



சித. ராமலிங்கம்
கல்லூரிக் குழுத் தலைவர்




வி. பழனியப்பன்

கல்லூரிக் குழுச் செயலர்




முனைவர். பழ. முத்தப்பன்

கல்லூரி முதல்வர்




சன்மார்க்க சபை முகப்புத் தோற்றம்



கல்லூரி வளாகம்

கணினி மையம்




முத்து விழாவில் பட்டம் பெறுபவர்கள்



முனைவர். சுப. அண்ணாமலை

செம்மல்பட்டம்



முனைவர். ச. மெய்யப்பன்

செந்தமிழ்மணிபட்டம்

முத்துவிழாக் குழுவினர்



சித. பழனியப்பச் செட்டியார்

தலைவர்




ப.சா.சிங்காரம் செட்டியார்

செயலர்




அ.சா. அண்ணாமலைச் செட்டியார்

உறுப்பினர்



ப.சா. அழகப்ப செட்டியார்

உறுப்பினர்




சித. ராமலிங்கம்
உறுப்பினர்




அ.வி. முருகப்பன்
உறுப்பினர்



வி. பழனியப்பன்
உறுப்பினர்




சி. நாகப்பன்
உறுப்பினர்



அ. சாமிநாதன்
உறுப்பினர்



சி. சாமிநாதன்
உறுப்பினர்



முனைவர். பழ. முத்தப்பன்
உறுப்பினர்



முனைவர். பழ. சிதம்பரம்
உறுப்பினர்

உ

மேலைச்சிவபுரி

சன்மார்க்க சபையின் முத்துவிழாவில்

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள்

போற்றி அளித்த பாமாலை

கொடையறத்தின் கொடையாளன் பாரிமலைச் சாரலூர்தான்
கொள்கைச்சான் றோர்மேலைச் சிவபுரிவாழ்
தொடையறத்தின் தமிழன்னை ஈன்றதவப் புதல்வர்களாம்
தொண்டுநிகர் பழநியப்பர் அண்ணாமலை
விடையறத்தின் சிவன்போல வளர்ந்துவரு நெஞ்சினிய
விருப்பந்தழை சன்மார்க்க சபையதனில்
நடையறத்தின் தெய்வநிகர் மொழிசெழிக்க வளம்கொழிக்க
நற்கணேசர் செந்தமிழ்க்கல் லூரிகண்டார்!

எண்ணினிய கலைபயிலும் எழிலார்ந்த மதிவளர்த்த
ஏந்தல் பண்டிதமணி சண்முகனார்
பண்ணினிய மொழித்தூய்மை பல்லாய்வு நூற்புலமை
படிறிலா மாணிக்கம் தமிழண்ணல்
விண்ணினிய தெய்வீகம் விளங்குகின்ற சைவமும்
விருந்தமிழ்தாம் செந்தமிழுமு யர்ந்தோங்க
மண்ணினிய வபழசா மரபுளோர் தாயனையர்
மகிழ்மேவு பொலிவுடனே வாழியவே!

தமிழ்க்கல்வி வள்ர்ந்தோங்கித் தலைமிசை ஆய்வுகொண்டு
தரணியிலே காலத்திற் கேற்றகல்வி
அமிழ்தினிய சிற்றூரில் அழகழகாய் வளர்செய்து
அனுதினமும் கண்ணிமையாய்க் காத்தின்று
இமிழ்பொங்கு மெங்களுயர் இல்லமெல்லா மெழிலார
ஓங்கியநீள் பயிர்க்கேற்ற மழையாய் நல்
குமிழ்செல்வம் நிறைநிறைய சன்மார்க்கம் செய்திடுவோர்
கொண்டாடும் முத்துவிழா வாழியவே!

இன்னணம்

மேலைச்சிவபுரி
21-8-99

முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள்

பாவாக்கம்: முனைவர் தி. பூங்குன்றன்.

முத்து விழாக் காணும் சன்மார்க்க சபை

சபைத் தோற்றம்:

மகாடிவருத்தங் கண்டு கொடித்தேரை நிறுத்தி வழிநடந்து சென்ற வள்ளல் பாரியின் பறம்புமலைச் சாரல் ஊர்களுள் ஒன்று **மேலைச்சிவபுரி.** இவ்வூரின் புகழ் எண்டிசையும் பரவக் காரணமாக அமைந்தது எழிலார்ந்து திகழும் சன்மார்க்க சபையாகும். ஈண்டு நின்றோருக்கும் சென்று நின்றோர்க்கும் தோன்றும் பறம்பு மலையனைய இச்சிற்றூரின் சன்மார்க்க சபை இன்று உலகெங்கும் ஓங்கு புகழ் பரப்பி நிற்கிறது. இச்சபை புதுக்கோட்டை மாவட்டத்தின் கடைக் கோடியில் உள்ளது. புதுக்கோட்டைக்கும் மதுரைக்கும் நடு நாயகமாகத் திகழும் இச்சிற்றூர் சிறு சுடர்ப்பேரொளி வீசுவதொப்ப உலகிற்கு அறிவொளி வீசி மெய்ஞ்ஞான வழி காட்டுகிறது எனில் வியப்பில்லை. தண்டமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் இச்சபை சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் 31 ஆம் நாள் (13-5-1909) தோற்றம் பெற்றது.

சபையைத் தோற்றியோர்:

சன்மார்க்க சபையைத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோற்றியவர் பழம் பெரும் குலவிளக்காம் மேலைச் சிவபுரி **வ.பழ.சா.** தமிழ்க்குடியினர். அவர்களுள் எளிமையும் இனிமையும் முறை செய்யும் திறமையும் புலவர் போற்றும் பாங்கும் தமிழ்ப் பயிர் வளர்க்கும் முனைப்பும் கொண்டவர் உயர்திரு **வ.பழ.சா.பழநியப்பர்.** சான்றாண்மைக்கு ஆழியாக விளங்கும் அவர் ஒழுக்கம் ஓம்பும் உயர் பண்பாளர். சால்பென்னும் திண்மை உடைய அவரின் இளவல் **அண்ணாமலையாரும்,** தமையன் குறிப்பறிந்து ஒழுகும் பெற்றியார். அவர்,

> அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
> பண்புடைமை என்னும் வழக்கு.

என்னும் குறளுக்கு இலக்கணமாக விளங்கியவர். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்னுமாப்போல நற்பண்பும், அறிவுத் திருவும் ஆளுமையும் கொண்ட இவ் விருவரும் அறிவுப் பயிர் வளர்க்கும் சன்மார்க்க சபையின் கால் கோளாவர். **பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரும்,** சோழவந்தான் **அரசஞ் சண்முகனாரும்** சபைத் தோற்றத்திற்குத் தூண்டுகோல்களாய் இருந்தனர்.

சபையின் குறிக்கோள் :

அறக் குலத்துதித்த **பழநியப்பரும், அண்ணாமலையாரும்** இச்சபையை உயிரினும் மேலாக மதித்தனர்; வளர்த்தனர்; போற்றினர். சபைகாக்கும் பெற்றியில் அவர்கள் சில குறிக் கோள்களை முன்னிறுத்தினர்.

அவை:

1. சமய உண்மைகளை மக்களிடையே பரப்புதல்.
2. சமய வளர்ச்சிக்கு ஒல்லும் வகையால் செயலாற்றுதல்.
3. சிறந்த அறிஞர்களை வரவழைத்துச் சபையில் சொற் பெருக்காற்றி மக்க ளிடையே கேள்வி ஞானம் பெருக்குதல்
4. சிறந்த நூல்களைச் சபை வெளியிடுதல்
5. நூல் நிலையம் அமைத்து மக்களின் அறிவுத் திறனைப் பெருக்குதல்.
6. தமிழ்க் கல்லூரி வழி தமிழ் வளர்த்தல்.
7. தெள்ளிய அறிஞர்கட்கு உயர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தல்.
8. காலத்திற்கேற்ற கல்வியைத் தருதல் போன்றன.

சபையும் பண்டித மணியும்:

நகரத்தார் பெருமக்களின் தலை மணியாக விளங்கியவர் மு. கதிரேசஞ் செட்டியார். அவர் தமிழன்னையின் தவப் புதல்வர். புலவர் போற்றும் மாமணியாக விளங்கிய அவர் தமிழ்ப் புலமைக்கோர் எடுத்துக்காட்டு. அப்புலமை மிக்க பண்டிதமணியால் சபை ஊற்றமும் ஊக்கமும் பெற்றது. தொட்டனைத்து ஊறும் மணற் கேணி யனைய கல்விப்பயிரை அவர் வளர்க்க இச்சபையே அவருக்குக் களமானது.

வடமொழிப் பயிற்சியும் செந்தமிழ் அறிவும் ஆங்கிலக் கல்வியும் ஒருசேர வாய்க்கப் பெற்றவர் பண்டிதமணி. இலக்கணப் புலமையும் சித்தாந்த அறிவும் இயல்பாக வாய்க்கப் பெற்ற அவர் அரசஞ் சண்முகனாரிடம் தமிழையும், தருவை நாராயண சாஸ்திரியாரிடம் வட மொழி யையும், காரைக்குடி சொக்கலிங்க அய்யாவிடம் சமய அறிவையும் பெற்றார். 1925 ஆம் ஆண்டு பண்டிதமணி என்னும் பட்டத்தைச் சன்மார்க்க சபை இவருக்கு வழங்கியது. மஹா மஹோபாத்தியாய, சைவ சித்தாந்த வித்தகர், முதுபெரும் புலவர் என்ற பட்டங்களை எல்லாம் அவர் பெற்றிருந்தாலும் இச்சபை வழங்கிய பட்டமே அவர் பெயருக்குப் பெருமை சேர்த்தது. அப்பட்டமே அவருக்கு வழங்கும் பெயராகவும் அமைந்தது எண்ணி இன்புறற்குரியது. இவ்வாறு சபையால் முடிந்த கேள்வி முழுவதும் உணர்ந்த பண்டித மணியார் இசை கொண்டார். பண்டித மணியால் சபையும் வளர்ச்சி அடைந்தது எனின் மிகையாகாது. இவர் இயற்றிய நூல்கள் யாவும் சபையால் வெளியிடப் பெற்றன.

தன் அரும் பெரும் முயற்சியால் நற்றமிழ்ப் புலவர்களை இச்சிற்றூருக்கு அழைத்து வந்து கேள்விச் செல்வத்தைச் செவி நுகர் கனிகளாக்கி இவ்வூர் மக்கள் பெறுமாறு செய்தனர். தம் மாணாக்கருக்கு இலக்கண இலக்கியப் புலமையோடு சொற் பெருக்காற்றும் புலமையினையும் ஏற்படுத்தி, அவர்கள் செல்லும் இடமெல்லாம் சபைப் பெருமையை நிலைநாட்ட உதவினார். தம் மாணாக்கத் தலைமணியாக வ.சுப. மாணிக்கனாரை உருவாக்கியவரும் இவரே.

சபை வளர்ச்சியில் செம்மல் வ.சுப.மாணிக்கனாரும் தமிழண்ணலும்

பண்டிதமணி போன்று இச்சபைக்கு ஊக்கமும் உறுதியும் தந்து சபைக்காக அயராது பாடுபட்டவர் செம்மல் வ.சுப. மாணிக்கனார். சபையைத் தம் உயிர் மூச்சாகக் கருதிய அவர் பல காலம் கல்லூரிக் குழுத் தலைவராக இருந்து அறிவுரை வழங்கிச் சபையை நல்லாற்றுப் படுத்தினார். சபையால் போற்றி வளர்க்கப்பட்ட மழலையர், தொடக்க, உயர்நிலை, கல்லூரிக் கல்வி நிலையங்கள் இவரின் அரும் பெரும் முயற்சியால் ஆக்கம் கொண்டன.

தமிழுக்குத் தொல்காப்பியமும் வாழ்வின் உயர்வுக்குத் திருக்குறளும் மனத் தூய்மைக்குத் திருவாசகமும் மறைகளாகக் கொண்ட இவர் சபையில் சைவமும் தமிழும் தழைக்க ஒல்லும் வகையால் உதவினார். தன் இறுதி மூச்சு வரை சபைக்காக உழைத்த உத்தமர் இவர் எனின் மிகைச் சொல்லன்று; தகைச் சொல்லாகும். கல்லூரியின் முதுகலை (எம்.ஏ) பட்டப் படிப்பு அவர் முயற்சியால் உருவானதாகும்.

பண்டிதமணி, செம்மல் வ.சுப.மாணிக்கம் போன்று வல்லாளரான தமிழண்ணல் அவர்களும் சபையைப் பெரிதும் போற்றி வளர்த்தவர்கள். பழமையும் பெருமையும் வாய்ந்த சபை ஓர் ஆய்வுமையமாகத் திகழ வேண்டும் என்ற செம்மல் வ.சுப. மாணிக்கனாரின் கனவினை முனைவர் தமிழண்ணல் அவர்கள் 1991 ஆம் ஆண்டு எம்.பில். பட்டப் படிப்பினைக் கல்லூரிக்குக் கொணர்ந்து நிறைவேற்றினார். சபை ஆலமரம் போன்று வானளாவ உயர்தல் வேண்டும் என்ற எண்ணத்தில் 1993 ஆம் ஆண்டு பி.எஸ்ஸி கணிதம், பி. காம், பி.பி.எம், பி.எஸ்ஸி கணினி என்ற அறிவியல் துறைப் பட்ட வகுப்புகளை மாலைநேரக் கல்லூரியாகத் தொடங்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்து செயல் படுத்தியவரும் அவரே. சபை வளர்ச்சியால் தாம் மகிழ்ந்து சிறந்து நின்றார் தமிழண்ணல் என்பது மிகையுரையன்று. தற்பொழுது கல்லூரிக் குழுத்தலைவராக சித. இராமலிங்கம் அவர்களும், செந்தமிழ்க் கல்லூரிச் செயலராக வி. பழநியப்பன் அவர்களும், மாலைநேரக் கல்லூரிச் செயலராக ப.சா.சிங்காரம் அவர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

சபையின் செவிலியர்:

மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி மனமகிழ்வர் திரு.பழநியப்பர். கடமையைக் காலந் தவறாது ஆற்றும் இவர் சபையின் முதல் தலைவராய் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார் இவர் காலத்தில்தான் கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும், தொல் காப்பியனார் புத்தக சாலையும் தோற்றம் பெற்றன. சபையின் இரண்டாவது தலைவராக இளவல் அண்ணாமலையார் தமையனார் வழியில் சபையைச் சிறப்பாக நடத்தினார். சபையின் தொடக்க காலத்தில் ஊன்று கோலாக நின்று சபையைக் காத்தவர்கள் ஏ.இராமநாதன் செட்டியார், திரு. மு.கு. குமரப்பச் செட்டியார் ஆவர். தொடக்ககாலச் செயலாளராகப் பணியாற்றிய இவர்கள் சபை வளரத் தாம் மகிழ்ந்தனர். இவ்விருவரும் சபையின் வேராக அமைய ஏனையோர் இச்சபையின் விழுதுகளாக ஊன்றிச் சபையைக் காத்தனர். மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது எவ்வத்தீமையும் மேற்கொள்ளாது சபை வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்கள் இவர்களே.

திரு.வ. பழ.சா. சாமிநாதன் செட்டியார் சபையின் மூன்றாம் தலைவராக 38 ஆண்டுகள் அரும்பணி புரிந்தார். இவர் மாபெரும் புலவர்களைச் சபைக்கு அழைத்து வந்து சமயத் தொண்டாற்றினார். சபைப் பெருமை உலகெங்கும் பரவ இப் பெரியோர்களே முழு முதற் காரணிகள் ஆவர். இவர்கள் காலத்தில்தான் பாலபண்டிதம் பயிற்று வித்து இச்சபை சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்று கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. மேலும் சபை வெள்ளிவிழா, பொன்விழா போன்ற விழாக்களை அனைவரும் வியக்கும் வண்ணம் கொண்டாடியது.இவர்கள் சபைத் தொண்டினை, கல்வித் தொண்டினைத் தெய்வத் தொண்டாகக் கருதிவந்தனர்.

சபை வளர்ச்சியில் சான்றோர்:

சபையின் நான்காம் தலைவரும் கல்லூரி நடைமுறைச் செயலருமாக விளங்கியவர் திரு.பழ. சிதம்பரம் செட்டியாராவார். சிவனை மறவாத சீலரான இவர் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். அவையறிந்து கண்ணோட்டத்துடன் கேட்டார் பிணிக்கும் தகைமையுடன் சொல்லும் சொல்லைத் திறனறிந்து சொல்லுவதில் வல்லவர். இதனால் கற்றார் பிணிக்கும் தகைஞராய் இவர் திகழ்ந்தார்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப ஒழுகுபவர். இவர் வளர்ந்து வரும் சபையை வளமாக்கப் பாடுபட்டவர் சபைக்கு உயிர்ப்பூட்டி ஓங்கு புகழ் காத்த இவர் காலத்தில் இருந்து சபை புத்துணர்ச்சியும் புதுப் பொலிவும் பெற்று உத்வேகத்துடன் வளர் நடை போட ஆரம்பித்தது. சபையைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து தமிழ்ப் பயிரை வளர்த்தவர் இவரே. சபைப் பொருள் வளம் பெருக இவர் அயராது பாடு பட்டதோடு சபையைக் கண்ணின் இமைபோல காத்தார்.

இளவல் அண்ணாமலைச் செட்டியாரின் பெருந்தவப் புதல்வரான திரு.அ. சாமிநாதன் செட்டியார் அவர்கள் 1969 ஆம் ஆண்டு சபையின் துணைத் தலைவராகத் திகழ்ந்தார். தந்தையையொப்பத் தனயனும் அறப்பணி செய்வதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். மனித வாழ்விற்குப் புற வளத்தோடு அக வளமும் சிறத்தல் வேண்டும் என்ற நோக்கோடு ஆன்மீகச் சொற்பொழிவாளர்களைச் சபைக்கு அழைத்துவந்து சைவ சமயப் புலமையை மக்களுக்கு எடுத்துரைக்கச் செய்தவர். இவர் காலத்தில் சபை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தழைக்கத் தொடங்கியது.

திரு. அ. சாமிநாதன்செட்டியார் அவர்களின் இளவல் திரு. அ. விசுவநாதன் செட்டியார் 1979 ஆம் ஆண்டு சபைத் தலைவரானார். மனித நேயம் கொண்ட இவர் சாண்றாண்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். சைவமும் தமிழும் இரு கண்களாகக் கொண்ட இவர் தமிழ்ப் பயிர் வளர்க்கச் சான்றோர் பலரைச் சபைக்கு அழைத்து வந்து சொற் பெருக்கு நிகழ்த்தினார். அல்லும் பகலும் அயராது உழைத்துச் சபையைக் காத்த அவர் தலைமையில் சபை மேன் மேலும் வளர்நிலை அடைந்தது.

திரு ப.சா. பழநியப்பச் செட்டியார் 1981 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டுவரை சபைத் தலைவராகவும் கல்லூரிச் செயலராகவும் பணி ஆற்றினார். கடுஞ்சொல் சொல்லா தகைமையாளரான அவர் சபை கல்லூரி நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து சபைக்குப் பெருமை சேர்த்தார். இவர் காலத்தில் புலவர் பட்டப்படிப்பு பி.லிட். பட்டப்படிப்பாக ஏற்றம் கண்டது. எம்.ஏ, எம்.பில்., மாலை நேரக் கல்லூரியில் பி.காம், பி.எஸ்ஸி, கணிதம், பி.எஸ்ஸி கணினி, பி.பி.எம். போன்ற அறிவியல் பட்டப் படிப்புக்கள் உருவாக்கம் பெற்றன. நூலகம் வளர்நிலையடைந்தது. பழைய மாணவர் கழகம் தோற்றுவிக்கப் பட்டுச் சபையின் பெருமையை நிலைநாட்ட இவர் ஆக்கம் புரிந்தார். கல்லூரியை விரிவு படுத்தியதோடு, கல்லூரிக்குத் தேவையான ஆசிரியர்கள் அலுவலர்களைக் கல்லூரிக் கல்வி ஆணையரிடமிருந்து அனுமதி பெற்றுத் தக்க முறையில் நியமித்துக் கல்லூரி சபை வளர்ச்சியில் இவர்கள் பெரிதும் பங்காற்றியமை நினைவு கூரத்தக்கது.

18 ஆண்டுகாலப் பணி அவரின் மாட்சிக்கு எடுத்துக் காட்டாகும். தருமசீலரான அவர் எளிமையை அணிகலனாகக் கொண்டவர். நின்ற சொல்லராகவும் நீடுதோன்று இனியராகவும் இருந்து சபைப் பெருமைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவியவர் ஆவார்.

சபையின் ஏழாவது தலைவராகத் திகழ்ந்தவர் திரு. சா. அண்ணாமலைச் செட்டியார். அமைதியே உருவான இவரின் பணி அளவிடற்கரியது. பதவியால் தான் மேன்மையடையாது, பணி செய்யும் இடத்தைச் சிறக்கச் செய்யவேண்டும் எனும் சிந்தனையுள்ளவர். இவரின் பணிக்காலத்தில் சபை வளர்பிறை என வளர்ந்தது. அவ்வமயம் அறிஞர்கள் பலர் சபை நாடிவந்து சபையின் மேன்மையைக் கண்டும் வியந்தும் சென்றார்கள். இவர் ஆறு ஆண்டுகள் சபைத்தலைவராக இருந்து தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தார்.

தம் இளமைக் காலம் முதலாகச் சன்மார்க்க சபையோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் திரு ஆ. நாகப்பச் செட்டியார். தமிழ்பால் தீராக் காதல் கொண்ட இவர் பிறர் மனமறிந்து நடக்கும் மாண்பாளர். எளிமையை அணிகலனாகக் கொண்ட இவர் சபைச் செயலாளராகவும் கல்லூரிக் குழுத் தலைவராகவும் விளங்கினார். இவரின் கொடையே இன்று எழிலாகத் தோற்றம் தரும் நாகப்பா மாணாக்கர் விடுதி. சபை வளர்ச்சியிலும் கல்லூரி வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டு பொருளுதவி செய்து வந்த இவரின் உருவப்படம் வைரவிழாவின் போது திறந்து வைக்கப் பெற்றது.

சிவநெறிச் செல்வராம் மகிபாலன் பட்டி சி. இராமசாமிச் செட்டியார் சபையின் அன்பர். சபையைத் தன் குடும்பமாக எண்ணியவர். சபை வளர உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் உதவியவர். மாணவர்களுக்குப் பரிசு வழங்கி அவர்களை ஊக்கப் படுத்தியவர். ஆண்டு தோறும் கல்வியில் முதலிடம் பெறும் மாணவருக்கு ரூ. 300/- வழங்கிச் சபைக்கும் கல்விக்கும் பெருமை சேர்த்தவர். மகளிர் விடுதியினைக் கட்டி மகளிர் பட்டங்கள் பெறுவதற்கு வழி வகை செய்தார். சிவனடி மறவா சிந்தையரான இவரும் தன் முன்னோர்கள் போன்று சபையில் சொற்பொழிவாளர்களை அழைத்து வந்து மாணவர்களுக்குச் சைவப்பற்றும் தமிழ்ப் பற்றும் பெருகச் செய்தார்.

தற்பொழுது சித. பழநியப்பச் செட்டியார் சபையின் தலைவராகவும், ப.சா. சிங்காரம் செட்டியார் சபைச் செயலராகவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

சபையும் புலவர்களும்:

தமிழ் கூறும் நல்லுலகிலுள்ள பெரும் அறிஞர்களனைவரும் நம் சபையில் காலடி பதித்தவர்களே. அவர்கள்:

1. இலக்கண இலக்கியப் புலமை வாய்ந்த சோழவந்தான் **அரசஞ் சண்முகனார்**
2. நல்லிசைப்புலவர் **மு.ரா.கந்தசாமிக் கவிராயர்.**
3. நெய்யாத தொன்னூல்கள் நிலைக்கவைத்த நீங்காத புகழ் மணக்கும் டாக்டர் **உ.வே. சாமிநாத ஐயர்**
4. பா யாப்பில் தனி சிறந்த **ரா. இராகவையங்கார்**
5. **கா. சு. பிள்ளை**
6. **உமாமகேசுவரம்பிள்ளை**
7. தமிழ்த்தென்றல் **திரு.வி.க.**
8. யாழ் நல்லார் **விபுலானந்த அடிகள்**
9. நாவலர் **சோமசுந்தரபாரதியார்**
10. உரைவேந்தர் **ந.மு.வேங்கடசாமி நாட்டார்**
11. சொல்லின் செல்வர் **ரா.பி. சேதுப்பிள்ளை.**
12. **ஈசான சிவாச்சாரியார்**
13. மொழிவல்லார் **தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்**
14. **ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை**
15. தமிழ்க்கடல் **ராய. சொக்கலிங்கம்**
16. டாக்டர் மு. **வரதராசனார்.**
17. **நெ.து. சுந்தரவடிவேலு.**

அனைவரும் இச்சபைக்கு வருகை தந்து கேள்விச் செல்வத்தை வழங்கியவர்கள். இச்சபைக்கு வராத பெரும் புலவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம்.

கேள்விப்பணி:

இச்சபை கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் பல்லிடங்களுக்கும்

அழைத்துச் சென்று சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப்பல சொற்பொழிவு களை நிகழ்த்தியது. சொற்பெருக்கு, பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகளுடன் பல்கலைக்கழகம், கம்பன் கழகம் என பன்னிலைகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்று வந்தவர்கள் சபை மாணவர்கள். விழாக்களின் போது சிறந்த பேச்சாளர்களை வரவழைத்துச் செவிச் செல்வம் பெருக்கியது சபை.

'கற்றிலனாயினும் கேட்க'

'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்'

என்பன உணர்ந்து சபை அரும்பெரும் செயல் களை ஆற்றிவருவது எண்ணி மகிழ்வதற் குரியன.

பட்டம் வழங்கல்:

தெய்வத் தமிழுக்கு மெய்மைப்பணி ஆற்றிய மேன்மைப் புலவர்க்குப் பட்டம் வழங்கி சிறப்பிப்பதைச் சபை தனது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டது. இரா. இராகவையங்கார் அவர்கட்கு **மகா வித்துவான்** என்ற பட்டமும் மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கட்குப் **பண்டிதமணி** என்ற பட்டமும், 45 ஆண்டுகட்கு முன்பே டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் தலைமையில் வழங்கி இச்சபை பெருமைப் படுத்தியது.

இம் மரபு பிறழாமல் சபையின் பொன் விழாவில் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களுக்கு **செந்தமிழ் மணி** என்ற பட்டமும் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்குப் **பெருந்தமிழ்மணி** எனும் பட்டமும் திரு. லெ.ப. கரு. ராமனாதன் செட்டியார் அவர்களுக்குப் **பண்டிதமணி** எனும் பட்டமும் திரு மு. அருணாசலம் பிள்ளை அவர்களுக்கு **முத்தமிழ் மணி** எனும் பட்டமும் வைர விழாவில் வ.சுப. மாணிக்கனாருக்கு **செம்மல்** என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தது. பாராட்டும் பட்டமும் மனிதர்களை நெறிப் படுத்துவன. இதனைத் தொல்காப்பியரும் "மாராயம் பெற்ற நெடுமொழி" எனக் குறிப்பர். இச் சபை தனது 15 வது ஆண்டிலேயே பட்டம் வழங்கும் நிகழ்ச்சியினை அமைத்திருப்பது எண்ணி மகிழத்தக்கது. இந்நாளில் இரு தமிழறிஞர்க்குப் பட்டம் வழங்கப் பெறுகிறது.

கல்விப்பணி:

சபையின் கல்விப் பணிக்குக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும், தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் மழலையர் பள்ளியும் சான்றாகும். கல்விப் பணியில் சபையின் இதயம் போன்ற உறுப்பு கணேசர் செந்தமிழ்க் கல்லூரி. தமிழ்நாட்டில் தோற்றம் பெற்ற 14 தமிழ்க் கல்லூரிகளில் இரண்டாவதாகத் தோன்றியது எனும் பெருமைக்குரியது கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆகும்.

தொன்மையும் பெருமையும் மிக்க சன்மார்க்க சபை 1909 இல் தானே ஒரு பாடத்திட்டத்தை வகுத்தது. அத்திட்டத்தின் வழி சிற்றிலக்கண இலக்கியங்களை ஆழமாகவும் அகலமாகவும் மாணவருக்குப் பயிற்று வித்தது. கல்வி பயிலும் மாணவர்களுக்கு எந்த வித இடையூறும் வருதல் கூடாது எனும் நல்லெண்ணத்தில் ஏழாவது ஆண்டுமுதல் மாணவர்களுக்குச் சபை உதவித்தொகை வழங்கியது. தொலைதூர மாணவர்கள் தங்கிப் பயில இட வசதி செய்துதந்தது. மாணவர்களுக்கு இலவசமாகவே கல்வி தரப்பட்டது. மாணவர்களுக்கு வேண்டிய வசதியினை 1916 ஆம் ஆண்டு தொடங்கிச் செய்து வருகிறது. என எண்ணுந் தோறும் நெஞ்சம் இனிக்கிறது.

1918 ஆம் ஆண்டு முதல் காலத்திற்கேற்ற கல்வி தரும் நோக்கோடு சபை மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டது. அதன்பின்னர் பிரவேச, பால பண்டிதத் தேர்வுகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து அனுப்பியது.

தேனினும் இனிய தமிழோடு பிற நாட்டுக் கலைச் செல்வங்களையும் மொழி பெயர்த்துத் தமிழுலகிற்குத் தருதல் வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் சிறிதளவு வடமொழியும் ஆங்கிலமும் இணைத்து மாணவர் களுக்குக் கற்பித்தது. 1938 ஆம் ஆண்டு சபை கல்விப் பணியில் ஒரு பெரிய சாதனையைக் கண்டது. அச்சாதனையே மதுரைத் தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து இருந்த கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றதாகும். அதன் பின்னர் பால பண்டிதக் கல்வி வித்துவான் முன்னிலை முடிநிலை என உயர்வு பெற்றது. கல்வி தொடர முடியா மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி ஏழை மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்தது. இன்றும் திறந்து வருகிறது சபை எனின் மிகையாகாது. அரசின் உதவித்தொகையைப் பெறும் மரபுப் படி மாணாக்கர் பலரும் பயன் அடைகின்றனர்.

இது காறும் 3000 மாணவர்கட்கு மேற்பட்டவர் சபையில் பயின்று பட்டம் பெற்றுள்ளனர். வளர் தமிழை நாற்றிசையும் அவர்கள் நாளும் வளர்த்து வருகின்றனர்.

சன்மார்க்க சபையில் கல்வி பெறும் மாணவர்கள் பெரும்பாலும் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றமை கல்லூரியின் செயல் திறத்திற்குக் காட்டாகும்.

1948-ல் இக்கல்லூரி மாணவர் நல்லப்பரெட்டியார் பல்கலைக்கழகத் தேர்வில் ஐந்தாம் ஜியார்ஜ் (ரூ.1000) நினைவுப் பரிசினைப் பெற்றார். 1969- ஆம் ஆண்டு பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் மாநில முதல் மாணவராக கே. வேங்கடசாமி தேர்ச்சி பெற்று ஐந்தாம் ஜியார்ஜ் மன்னனின் நினைவுப் பரிசு ரூ.1000/- பெற்றார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களிலுமுள்ள மாணவர்கள் இச்சிற்றூரில் வந்து பயின்று பயனெய்துவது இக்கல்லூரியின் மாண்பினை வெளிப்படுத்தும். இங்கு பயின்ற மாணவர்கள் அனைவரும் ஆசிரியர்களாக, பேராசிரியர் களாக மட்டுமின்றி ஏனைய பல்துறை களிலும் பல்கலைக் கழகங்களிலும் சீரும் சிறப்புமாய்ப் பணிபுரிந்து கல்லூரியின், சபையின் பெருமைக்கு அணிசேர்க்கின்றனர்.

கல்வி வளர் நிலைகள்:

பால பண்டித கல்வியிலிருந்து வித்துவான், புலவர் என்ற நிலைக்கு வளர் நிலை அடைந்த கல்லூரி 1974 ஆம் ஆண்டு பி.லிட். பட்டப்படிப்புக் கல்வி அளவில் வளர்ச்சி அடைந்தது. தொடர்ந்து சபையால் வளரும் கல்லூரியில்,

1987 ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டப்படிப்பும்

1991 ஆம் ஆண்டில் எம் :. பில். ஆய்வுப் படிப்பும் உருவானது. தமிழ்க் கல்லூரியை உருவாக்கிய சபையானது அக்கல்லூரியை 1993 ஆம் ஆண்டு மாலை நேரஅறிவியல் கல்லூரி யாகவும் விரிவடையச் செய்தது. மாலை நேரக் கல்லூரியில் பி.எஸ்ஸி கணிதம், பி.காம், பி.பி. எம், பி.எஸ்ஸி கணினி வகுப்புக்கள் தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடந்து வருகின்றன.

நெற்குப்பை திரு இராம. செல்வம் பி.எஸ்ஸி கணினி பட்டப்படிப்புக்கு பெரும் பொருளுதவி செய்தார்.

மாணவர்களின் நன்மை கருதி கல்லூரியில் எம்.ஏ. மாணவருக்குப் பண்டிதமணி ஆய்வரங்கமும் எம்:.பில் மாணவருக்கு வ.சுப. மாணிக்கனார் ஆய்வு அரங்கமும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம் மூன்றாம் கருத்தரங்கு 1997 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28,29,30 ஆம் நாட்களில் சபையில்

நடத்தப் பெற்றது சிறப்பிற்குரியது. பன்னிரு கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களும், பதினேழு கணேசர் செந்தமிழ் மாலை நேரக் கல்லூரி ஆசிரியர்களும் , ஒன்பது கணேசர் செந்தமிழ்க் கல்லூரி அலுவலர்களும் என முப்பதெட்டுப் பணியாளர்களைக் கொண்டு சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது கணேசர் செந்தமிழ்க் கல்லூரி.

சமுதாயப்பணி:

மாணவர்களுக்குக் கல்வி மட்டும் குறிக்கோளன்று. அவர்கள் சமுதாயப் பணிகளையும் செய்தல்வேண்டும் என்பதற்காக நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், முதியோர் கல்வித் திட்டம் போன்றனவற்றிலும் சபை மாணவர்களை ஈடுபடுத்தி உள்ளது.

திருக்களம்பூர், ஏனாதி, தொட்டியம்பட்டி எனும் கிராமங்களைத் தத்தெடுத்து அக்கிராமங்களில் நலப்பணி செய்தனர் மாணவர்கள்.சாலை போடுதல், சாலை செப்பனிடுதல் , மயான சாலை செப்பனிடுதல் , ஊரணி சுத்தம் செய்தல்,பண்டிதமணி பூங்கா உருவாக்குதல் போன்ற சமுதாயப் பணிகளை மாணவர்கள் செய்து சிறந்துள்ளனர்.

ஆண்டுதோறும் இரத்த தானம் செய்து ஏழைகள் பலரின் உயிரைக் காத்து வருகின்றனர் சபை மாணவர்கள்.

மக்களின் குறிக்கோள் வாழ்க்கைக்கு உதவியதோடு நாட்டு நலத்திலும் ஈடுபாடு காட்டியுள்ளது சன்மார்க்க சபை.

1. தேசிய நிதிக்கு இருமுறை தொகை அளித்தது.
2. தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு உதவி நிதி வழங்கியது.
3. கோபால கிருட்டிண கோகலேயின் படம் சபையில் தோற்றுவித்தது.
4. நாட்டுத் தலைவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது.
5. முதல் உலகப்போரில் இந்திய அரசின் வெற்றிக்கு உவந்து உணவு வழங்கியது.
6. சுதந்திரப் பொன் விழா ஆண்டு சிறப்புறக் கொண்டாடியது.
7. கார்கில் போருக்கு மாணவர் வழியாக ரூ.5001/- நிதி உதவி செய்தது.

தொடக்கப்பள்ளி:

சபை தொடங்கிய காலமுதல் தொடக்கப் பள்ளியும் செம்மையுற நடந்து வருகிறது. எண்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே புத்தகம் எழுதுபலகை, எழுதுகோல் போன்றவற்றைத் தொடக்கப் பள்ளிச் சிறுவர்களுக்குக் கொடுத்துக் கல்விப் பயிரை வளர்த்து வருகின்றது சன்மார்க்க சபை. 1955 ஆம் ஆண்டு தொடக்கப்பள்ளிச கட்டிடம் கட்டப் பெற்றது. கட்டிட நிதியாக திருமதி .சித. சேதுக்கரசி ஆச்சி அவர்கள் ரூ. 4500/- நன்கொடையாக வழங்கினார்கள். ஏனைய தொகையைச் சபையே ஏற்றுக்கொண்டது. அரசினர் ரூ. 5000/- இக்கட்டிடத்திற்கென மானியமாக வழங்கினர். பொன் விழாக் கண்ட இச்சபை வைர விழா காணும்போது பள்ளியின் கல்வித்தரம் உயர்ந்ததோடு ஆசிரியர்களும் மாணவர்களும் இரண்டு மடங்காயினர் வைரவிழாவின் போது பள்ளியின் வகுப்பறையை விரிவு படுத்த சபை மேலும் ரூ. 5000/- செலவு செய்தது. அவ்வமயம் 500 மாணவ மாணவியர்கள் இங்கு கல்வி கற்றார்கள் என்பது குறிப்பிடத் தகுந்தது.

உயர்நிலைப்பள்ளி:

மேலைச்சிவபுரி வாழ் மக்கள் கல்வியறிவு பெற வேண்டும் எனும் நல் லெண்ணம் கொண்ட சபையினர் தமக்குள்ளேயே ஒரு குழு அமைத்தனர். இவ்வூரில் தொடக்கக் கல்வி பெறும் மாணவர்களுக்கு உயர் கல்வி பெற அனைத்து வசதிகளும் செய்து தர விழைந்தனர் சபையோர். அதன் விளைவாக 14-7-1967 இல் உயர்நிலைப் பள்ளி உருவாக்கம் பெற்றது. இஃது அரசினர் பள்ளியாக மாற்றமுற ப.ழ.சாமிநாதன் செட்டியார் குடும்பத்தினர் ரூ. 10,000 /- கட்டிப் பேருதவி புரிந்தனர். இதனால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

மழலையர் பள்ளி:

தொடக்கப்பள்ளி, உயர் நிலைப் பள்ளி, கல்லூரி எனக் கல்விப் பணியில் செம்மாந்து நிற்கும் சபை மழலையர்களுக்கும் கல்வி தேவை என்ற நல்லெண்ணத்தில் 1981 ம் ஆண்டு செம்மல் வ.சுப. மாணிக்கம் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளியைத் தோற்றுவித்தது. மழலையரை இள மழலையர், முது மழலையர் எனப் பகுத்து அவர்கள் விரும்பிய விளையாட்டு முறையில் தமிழிலேயே இங்குக் க ல்வி கற்றுத் தரப்படுகிறது. தமிழ் நாட்டில் உள்ள இரு மழலையர் பள்ளிகளில் கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளியும் ஒன்று எனஎண்ணும் போது சபை மகிழ்கிறது.

நூற்பணி:

தமிழோடு சிறிது வடமொழியும் ஆங்கிலமும் பயிற்றுவித்த சபை வடமொழி நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியைத் தனது பதிமூன்றாவது ஆண்டில் தொடங்கியது. இன்று வளர்ந்து வரும் மொழி பெயர்ப்புத் துறைக்கு முன்னோடியாகச் சபை ஒரு வடமொழி ஆசிரியரை அன்று நூற்பணிக்காக நியமித்தது. பண்டிதமணியின் மொழிப் புலமையால் மொழி பெயர்ப்புத் துறை அவரை ஈர்த்தது. இதனால் பல மொழிபெயர்ப்பு நூல்கள் உருவாகின. அவரின் அனைத்து நூல்களையும் சபை வெளியிட்டு உலகுக்குப் பரப்பியது.

சபை வெளியிட்ட நூல்கள்:

1. சுலோசனை
2. உதயணசரிதம்
3. சுக்கிரநீதி
4. மண்ணியல் சிறுதேர்
5. உரைநடைக் கோவை I. சமயம்
   உரைநடைக் கோவை II. இலக்கியம்
6. மணிமலர்த்திரட்டு
7. திருச்சதகம்
8. நீத்தல் விண்ணப்பம்
9. திருவெம்பாவை
10. சபைக் கட்டுரைகள்
11. நாட்டுக்கோட்டை நகரத்தார் சீர்திருத்தம்
12. பண்டித மணியின் நடை நயம்.
13. பண்டிதமணியின் நாடகத்திறன்
14. ஊன்று கோல்
15. பண்டிதமணி பிள்ளைத்தமிழ்
16. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு
17. இலக்கிய நயம்
18 பொருள்நூல்
19. பதிற்றுப்பத்து அந்தாதி.

போன்ற இவ்வரிய நூல்களைச் சபை வெளியிடும் உரிமையைப் பண்டிதமணியின் புதல்வர்கள் சபைக்கு மனமுவந்து வழங்கியுள்ளனர். இன்று இந்நூல்கள் அனைத்தும் பல்கலைக் கழகப் பாடப் புத்தகமாகவும் ஆய்வாளர்களுக்கு ஆய்வு மூல நூலாகவும் விளங்குகின்றன.

நூல் நிலையப்பணி:

சபையில் இயங்கி வரும் நூல் நிலையம் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் பொலிவு பெறுகின்றது. ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் பெயரால் **தொல்காப்பியனார் புத்தக சாலை** என்னும் நூலகம் ஒன்று 1910 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலான மொழிகளில் சிறந்த நூல்கள் நூலகத்தில் உள்ளன. கிடைத்தற் கரிய பண்டைய நூல்களும் நாள் தோறும் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் ஆய்வு நூல்களும் மாணவருக்குத் தேவையான பாடநூல்களும், நாள் , வார, மாத, பருவ, ஆண்டு இதழ்களும், இங்கு வந்த வண்ணம் உள்ளன. நூல்கள் அனைத்தும் வகை தொகைப் படுத்தி மாணவருக்குப் பயன்படும் வண்ணம் சீரிய நூலகர் ஒருவரைக் கொண்டு நூலகம் இயங்கு கிறது. சபை மாணாக்கரல்லாது பிற அறிஞர்களும் இந்நூல் நிலையத்திற்கு வந்து கிடைத்தற்கரிய நூல்களைப் பெற்றுப் பயன் கொள்ளுகின்றனர் .

சமயப்பணி:

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கச் செய்வது சபையின் குறிக் கோளாகும். சைவ சமயத்தை மேம்படுத்தச் சபையோர் பல் அறிஞர்களை அழைத்துச் சமயச் சொற் பொழிவு நடத்தி மக்களிடையே சைவமும் தமிழும் தழைக்கச் செய்து வருகின்றனர். சமயக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வருக்கும்,காரைக்கால் அம்மையாருக்கும் ஆண்டுதோறும் குருபூசைகள் நிகழ்த்து கின்றனர். திரு கும. நடராசன் செட்டியார், திரு. ஏ.ராம.ஏ. இராமநாதன் செட்டியார் , திரு.வ.பழ. சா. குடும்பத்தினர், திரு நெ. நாகை குடும்பத்தார். நால்வருக்கும், சபையோர் காரைக்கால் அம்மையாருக்கும் குருபூசை நிகழ்த்தினர்.

தற்பொழுது அப்பருக்கு ப.சா. அழகப்பச் செட்டியாரும், சம்பந்தருக்கு பழ. சிதம்பரம் செட்டியாரும், சுந்தரருக்கு ப.சா. சிங்காரம் செட்டியாரும் மாணிக்க வாசகருக்கு சி.த. இராமலிங்கம் செட்டியாரும் காரைக்கால் அம்மையாருக்கு சா. அண்ணாமலைச் செட்டியாரும் குருபூசை நிகழ்த்தி வருகின்றனர். குருபூசையின் போது அவ்வந் நாயன்மார் புராணங்கள் படிக்கப் படுகின்றன. சபைச் சிறார் களுக்குக் காலையும் மாலையும் தேவாரம், திருவாசகம் பண்ணோடு பயிற்றுவிக்கப் பட்டன.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

எனும் தேவாரப் பாடலே கல்லூரி வழிபாட்டுப் பாடலாக பாடப்படுகிறது என்பது குறிப்பிடத் தகுந்தது.

சமய விழாக்களில் விபூதி மான்மியம் , சைவ சமய மகிமை , சிவ பர தத்துவம் , பஞ்சாட்சரம் , நித்தியப் பொருட்கள், பதி புண்ணியம், சைவ சித்தாந்தம், அத்வைத உண்மை, சிவ வேட வணக்க முறை, சிவக்ஞானம் என்ற பல சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவ சமயம் தழைக்க வழி வகுத்தனர்.

பிறபணி :

தமிழ், சைவம் இரண்டின் வாழ்விற்கும் வலிமைக்கும் அரண் செய்யும் செயல்களை நாள்தோறும் சபை ஊக்குவித்து வந்துள்ளது. தேர்விற்குத் தமிழ் மொழிப் பாடமும் அமைதல் வேண்டும் என 80 ஆண்டுகளுக்கு முன்பே சபை தீர்மானம் நிறை வேற்றியது. இன்று அரசு கொண்டுவரும் செயல்களைச் சபை என்பது ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானமாகக் கொண்டு வந்தமை சபையின் புலமைக்குக் காட்டாகும்.

1. இந்தி மொழியைக் கட்டாயப்பாடமாக்க வேண்டாமென சபை 1937 இல் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

2. 1942இல் வித்துவான் பட்டத்திற்குப் பதில் புலவர் பட்டம் வழங்க வேண்டுமென வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றியது.

3. கலைச் சொற்கள் தனித்தமிழ்ச் சொற்களாக அமைதல் வேண்டுமென அரசிடம் 1946 ல் வேண்டிக் கொண்டது. இவை போலும் தீர்மானங்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நாட்டுமக்களின் குறிக்கோள் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.

அறக்கட்டளைகள்:

சைவமும் தமிழும் வளர்க்கும் எண்ணம் கொண்ட சபைச் சான்றோர்கள் நீத்தார் நினைவாக அறக் கட்டளைகளை நிறுவி யுள்ளனர்.

1. மகிபாலன்பட்டி சி. இராம. அன்னபூரணி ஆச்சி நினைவாக அவரது மைந்தர் சி. இராம. நாகப்பரால் 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

2. திரு. வ. பழ.சா. பழசாமிநாதன் செட்டியார் நினைவாக அவரது மைந்தர் திரு. ப. சா. சிங்காரம் செட்டியாரால் 1991 இல் நிறுவப்பட்டது.

3. வ.பழ.சா. பழ. சிதம்பரம் செட்டியார் நினைவாக அவரது குடும்பத்தாரால் 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இவ்வறக் கட்டளைகளை நிறுவியோர் சைவச் செம்மல்களை அழைத்து வந்து சமயச் சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகின்றனர்.

பொருள் திரட்டல்:

சபையின் நெடுநாள் தொண்டின் காரணமாக புரவலர்கள் பலர் மனமுவந்து நிதி உதவி செய்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்

1. கோட்டையூர் அ.க.சித.அழ. சிதம்பரம் செட்டியார்
2. காரைக்குடி திரு.வீர.இராம. இராமசாமி செட்டியார்
3. திரு. அ.சொ. அண்ணாமலை செட்டியார்.
4. திரு க.வெ.சித.வெ. வெங்கடாசலம் செட்டியார்
5. தேவகோட்டை திரு. சேவு.மெய்யப்ப செட்டியார்
6. தமிழ்க்கடல் திரு. ராய. சொக்கலிங்கம் செட்டியார்
7. திரு சா. கணேசன் செட்டியார்
8. நாச்சியாபுரம் திரு சண்முகம் செட்டியார்
9. சி. இராம. இராமசாமி செட்டியார்
10. திருப்புத்தூர் திரு. நா. ஆறுமுகம்பிள்ளை
11. திரு. இராம வீர. இராம. பெரியகருப்பன் செட்டியார்.

1969 ஆம் ஆண்டு சபைத் தலைவராகவும், கல்லூரி நடைமுறைச் செயலராகவும் விளங்கிய திரு.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களும், அவர்கள் மனைவியார் திருமதி சேதுக்கரசி ஆச்சி அவர்களும், செம்மல் வ.சுப. மாணிக்கனாரும் 25-5-1962 இல் பொருள் சேர்க்க மலேயா, சைகோன் சென்றனர். கோட்டையூர் திரு அ.க. சித. அழ. சிதம்பரம் செட்டியார் பெரும் பொருள் வழங்கிச் சபையின் ஆக்கத்திற்கு உதவியுள்ளார்.

வளர்ச்சிகள்:

1. வகுப்பறைகள் கட்டுவதற்குச் சபையின் கீழ்ப்புறத்தில் புதிதாக இடம் வாங்கப் பெற்றது.

2. சபையின் முன் மண்டபம் 25-11-1961 இல் புதிதாகக் கட்டி எழுப்பப் பெற்றது.

3. கணேசப் பெருமான் எழுந்தருளி இருக்கும் இடத்தின் மேற்பகுதி திருத்தி அமைக்கப் பெற்றது.

4. நாகப்பா மாணவர் இல்லம் எனும் பெயரிய மாணவர் இல்லம் திரு. ஆ. நாகப்பச் செட்டியார் அவர்களால் புதிதாகக் கட்டி வழங்கப் பெற்றது. வசதிகள் பெருகிய இவ்விடுதியில் 85 மாணவர்கள் தங்கினர்.

5. முன்னாள் தலைவர் வ. பழ.சா. சாமிநாதன் செட்டியார் அவர்களின் மைந்தர்கள் சபையின் பின் புறத்தில் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 20,000 /- நன்கொடை வழங்கினர் . ரூ. 61.000/- செலவில் மிகச் செம்மையாக நான்கு வகுப்பறைகள் கட்டப் பெற்றன.

இக்கட்டிடச் செலவில் சபை ரூ. 41,000 ஏற்றது. **சாமிநாத நிலையம்** எனப் பெயரிய இக் கட்டிடத் திறப்புவிழா 6-9-1968 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

சன்மார்க்க சபையின் மையக் கட்டிடத்தில் நடைபெற்று வந்த தமிழ் வித்துவான் வகுப்புகள் புதிய வசதிகளுடன் நடைபெற 6-9-1968 ல் நான்கு வகுப்பறைகளுடன் கூடிய சாமிநாத நிலையம் கட்டப்பெற்றது. பின்னர் மாலை நேர அறிவியல் வகுப்புகள் நடைபெற அதன் மேற் பகுதியில் ஆறு வகுப்பறைகள் கட்டப் பெற்றன.

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வீர முத்துக்கருப்பன் கல்லூரிக் கட்டிடத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார். பின்னர் கல்லூரி அலுவலகத்திற்கு எனத் **தனிப்பகுதி கட்டப் பெற்றது**. தற்பொழுது கூடுதலாக மேலும் மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப் பெற்று இன்று திறப்பு விழா கொண்டாடப் பெறுகிறது.

பொன்விழா:

ஐம்பது ஆண்டுகள் மொழிப்பணி புரிந்த சன்மார்க்க சபை 1959 ஆம் ஆண்டு பொன்விழாக் கண்டது. புகழையும், பொருளையும் நாடாது தமிழையும் சமயத்தையும் வளர்த்த சபையின் பொன் விழாவின் போது திரு.பழ. சாமிநாதன் செட்டியார் தலைவராகவும் திரு பழ. சிதம்பரம் செட்டியார் துணைத் தலைவராகவும் திரு. நாகப்பச் செட்டியார் செயலராகவும் பொறுப்பு ஏற்றிருந்தனர். விழாவை முன்னாள் முதலமைச்சர் திரு கு. காமராசர் தொடங்கி வைத்தார் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் தலைமை தாங்கினார் அன்று 40 கட்டுரைகள் தாங்கிய 200 பக்கங்களுக்கும் மிகுந்த மலரொன்று வெளியிடப்பட்டது. முதுபெரும் புலவர் களான திரு. டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குச் **செந்தமிழ்மணி** என்ற பட்டத்தையும் உயர்திரு தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்குப் **பெருந்தமிழ் மணி** என்ற பட்டத்தையும் , திரு. லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்குப் **பண்டிதமணி** என்ற பட்டத்தையும் உயர்திரு வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை அவர்களுக்கு **முத்தமிழ்மணி** என்ற பட்டத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் இராஜா சர்மு.அ. முத்தையா செட்டியார் முன்னிலையில் சபை வழங்கியது.

பொன் விழாவின் முதல்நாள் தலைவர் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார் உருவப்படமும் சன்மார்க்கசபை முன்னாள் தலைவர் வ.பழ. சா . அண்ணாமலைச் செட்டியார் உருவப்படமும் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் உருவப்படமும் திறந்து வைக்கப் பெற்றன.

வைர விழா:

60 ஆண்டுகளாக இடையறாது இத்தகு ஒள்ளிய பணிகளைச் செய்து உயர்ந்த இச்சபை 8-2-1970 ஆம் ஆண்டு தனது வைர விழாவினைக் கொண்டாடியது. அவ்விழாவிற்கு தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களான டாக்டர் மு. வரதராசனார் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு ஆகிய இரு பெருமக்களும் தலைமை தாங்கினர். சபையின் வரலாற்றுச் சிறப்புடைய திரு ஆ. நாகப்பச் செட்டியார் உருவப்படமும் அன்று திறந்து வைக்கப்பெற்றது.

திரு. வசுப. மாணிக்கம் அவர்கட்குப் பெரும்புலவர் செம்மல் என்ற பட்டம் வழங்கப்பட்டது. சொன்மாரிப் பொழியும் நன்நாவலர் பலர் கலந்து கொண்டு சொற்பொழிவு செய்து சிறப்பித்தனர். இவ் விழாவால் சபை ஏற்றமும் எழுச்சியும் பெற்றது

தமிழ்ப் பல்ககலைக்கழகமும் சபையும்

1997 மார்ச்சு 19, 20 ஆகிய இருநாட்கள்-சன்மார்க்கசபைச் செயலர் வி. பழனியப்பன் பெருமுயற்சியால் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமும் - சன்மார்க்க சபையும் இணைந்து பண்டிதமணி கருத்தரங்கை நடத்தியது பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும். நான்கு அமர்வுகளில் தமிழறிஞர் பலர் கலந்துகொண்டு பண்டிதமணியின் புலமையினை ஆய்வுக் கட்டுரைகளாக வழங்கினர்.

'சன்மார்க்க சபை வாழ்க ! தமிழணங்கு நீடூழி தழைத்து வாழ்க !' என்ற அ ர ச ஞ் ச ண் மு க னா ரி ன் பொய்யாமொழிக்கிணங்க சபை பல நூறு வளர்ச்சிகளைக் கண்டு வானளாவ உயர்ந்து நிற்கிறது எனில் மிகையாகாது.

நன்றி கூறல்:

இச்சபையின் ஆக்கங்கருதி அன்புடன் பணியாற்றி வரும் மெய்யன்பர்களுக்கும் குருபூசைகளை நடத்திவரும் பெரியோர்களுக்கும், எங்கள் வேண்டுகோளுக் கிணங்கி சபை விழாக்களில் தலைமை தாங்கியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் சிறப்பித்த அறிஞர் பெருமக்களுக்கும், இச்சபையின் வளர்ச்சி கருதி நன் கொடை உதவிய நல்லோர் பலருக்கும், ஆண்டுதோறும் கல்லூரிக்கும் தொடக்கப் பள்ளிக்கும் உதவி நிதி அளித்து வரும் தமிழக அரசுக்கும், நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக நூல்கள் வழங்கிய அன்பர்களுக்கும், இம்மலர் சிறக்க விளம்பரம் தந்துதவிய அன்பர்கட்கும் எங்கள் மனமுவந்த நன்றியைச் செலுத்துகிறோம்.

மன்னு லகத்து வாழுயி ரெல்லாம்
நல்லல வாழ்க்கையின் நனிசிறப் புறுக.
கல்வியுஞ் செல்வமும் கவினுறச் செறிந்து
பல்வகை வளங்களும் பார்மிசை திகழ்க!
அன்பும் அருளும் ஆருயி ரெய்துக
தெய்வத் தமிழும் சைவத் துறையும்
மெய்ந்நிலை வகையின் வீறுபெற் றுயர்க!
வாழ்க இறையருள் வாழ்க உயரறம்
வாழ்க பல் லாண்டு வாழ்கவே
நெஞ்சங் குளிர்ந்து பிஞ்சுவாழ்த் துவமே!

தமிழ்த்தாய் வாழ்க!

20-8-1999

ப. சா. சிங்காரம்
செயலாளர்

காரைக்காலம்மையார்

திருமதி. சாரதா நம்பி ஆரூரன், தமிழ்ப் பேராசிரியை., சென்னை.

"நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யாலடந் தேற, வுமை நகலுஞ்,
செம்பொன் னுருவ "னென்னம்மை" யெனப் பெற்றவள்
செழுந்தேன்
கொம்பி னுருகாரைக் காலினின் மேய குலதனமே."

- திருத்தொண்டர் திரு அந்தாதி

அம்மையார் வரலாறு:

சோழ வள நாட்டைச் சார்ந்த காரைக் காலில் தனதத்தன் என்ற வணிகனுக்குப் புதல்வியாய்த் தோன்றினார் புனிதவதியார். அம்மையாரைப்பற்றிய புராணத்திற்குப் "பேயார் புராணம்" என்ற பெயருண்டு. அம்மையார் இறைவனை வேண்டி பேய் வடிவம் பெற்றதாலும், தம்மைக் "காரைக்காற் பேய்" என்று தமது பாடல் களில் குறிப்பிட்டுள்ளதாலும் இவருடைய புராணம் "பேயார் புராணம்" எனப்பட்டது. சேக்கிழார் அம்மையார் வரலாற்றைப் "பேயார் புராணம்" என்றோ "புனிதவதியார் புராணம்" என்றோ குறிப்பிடவில்லை. "அம்மை" என்று இறைவனே அழைத்த சிறப்பு நோக்கியே "காரைக்காலம்மையார் புராணம்" என்று பெயரிட்டார். புராணத்தை ஆரம்பிக்கும்போது காரைக்காலம்மை பெருமை கூறுவாம் என்று ஆரம்பிக்கிறார். 'கீதம் முன்பாடும் அம்மை' என்று முடிக்கிறார். 'வேணியினார் அம்மையென மதுர மொழி கொடுத்தருளப் பெற்றாரை' எனச் சிறப்பிக்கின்றார்.

> "இறைவனைக் காண வேண்டிப் பேய் வடிவம் பெற்றதாலும், தம்மைக் காரைக்காற் பேய் என்று தனது பாடல்களில் குறிப்பிட்டு உள்ளதாலும் இவருடைய புராணம் பேயார் புராணம் எனப்பட்டது. "

அழகின் கொழுந்தென வளர்ந்த புனிதவதியின் உரிய பருவத்தில் நிதிபதி என்ற வணிகனின் மகனான பரமதத்தனை மணந்தார். தந்தைக்கு ஒரே மகளாதலின் கணவனுடன் தனிமையில் காரைக்காலிலேயே வாழ்ந்தார்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்ற வள்ளுவர் வழியில் வாழ்ந்து வந்தார்.

"நம்பரடியார் அணைந்தால் நல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னாலவர்க்கு தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக் கீழுணர்வு மிக."[1]

ஒழுகி வாழ்ந்தார் அம்மையார்.

ஒருநாள் தொழில் காரணமாகப் பரமதத்தனைக் காண வந்தவர்கள் அவனுக்கு இரண்டு மாங்கனிகளை அளித்தனர். அவற்றை அவன் 'மனைக் கண் கொடுக்க' என்ற முன்னதாகவே ஆள் மூலம் அனுப்பினான். சிறிது போழ்தில் பரமனார் திருத்தொண்டர் வடிவில் பசியுடன் அம்மையார் இல்லத்திற்கு வந்தார். வேதங்கள் மொழிந்த பிரான் மெய்த்தொண்டர் நிலை கண்டு "நாதன் தன் அடியாரைப் பசி தீர்ப்பேன்" என்றெண்ணிய அம்மையார் சோறு மட்டுமே சமைத்திருந்தாலும் கறிவகைகளாக்கும் வரை அடியவர் பசி பொறுக்கும் நிலையில் இல்லாததாலும் சோற்றமுதை மாங்கனியொன்றுடன் படைத்தார். அடியார் அகன்றார். 'இல்லாளன்'[2] வந்தான்.

நண்பகலுணவுண்ண வந்த நாதனுக்கு மீதமுள்ள மாங்கனியை அரிந்து வைத்தார் அம்மையார். 'மனைவியார் தாம் படைத்த மதுரமிக வாய்ந்த கனிதனை நுகர்ந்த கணவன்', 'இனையது ஒரு பழம் இன்னும் உளது. அதனை இடுக' என்றார். அம்மையார் கொண்டு வருவார் போலச் சென்றுவிடையவரைவேண்ட 'கைம்மருங்கு'

வந்திருந்தது அதிமதுரக் கனியொன்று ' அதைப் படைத்தார். சுவைத்துண்ட கணவன் ' இது முன்னையதிலும் நனி சுவையுடையது. இதனை எங்குப் பெற்றாய் ?' என வினவ அம்மையார் நிகழ்ந்ததைக் கூறினார்.

'மற்றிதுதான் தேகடைய சடைப்பெருமான்
திருவருளே இன்னமுமோர்
ஆசில் கனி அவனருளால் அழைத்து அளிப்பாய்'

என்றான். அம்மையாரும் இறையருளால் மற்றொரு கனியை வரவழைக்க வணிகன் கைபட்டதும் கனி மறைந்தது. அம்மையாரை அணங்கென எண்ணி அஞ்சினான். வணிகன் வணிகத்தின் நிமித்தம் பிரிவது போல் பிரிந்து, பாண்டிய நாட்டில் ஒரு பட்டினத்தில் சென்று தங்கித் தன்னுடைய வணிகத்தைப் பெருக்கி அவ்வூர் வணிகன் மகள் ஒருத்தியை மணந்து கொண்டான். தான் பெற்ற மகவுக்குப் புனிதவதி என்று பெயரிட்டான். இச்செய்திகளை அறிந்த அம்மையாரின் சுற்றத்தார் அவரைக் கணவனிடம் அழைத்துச் சென்றனர். அவன் மனைவி மகளுடன் வந்து அம்மையாரின் காலில் வீழ்ந்து வணங்கினாள்.

"யானுமதருளால் வாழ்வேன்,
இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்". என்று உரைத்தான். வியந்த

சுற்றத்தார்க்கு நிகழ்ந்தனை உரைத்தான். "ஈங்கிவன் குறித்த கொள்கையிது. இனி இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால்ஆங்கு நின்றார்கள் போற்றும் பேய் வடிவு. அடியேனுக்குப் பாங்குற வேண்டும்"

என்று வேண்டிப் பெற்றார். தான் வேண்டிய வண்ணமே பேய் வடிவு அருளிய இறைவனருளை வியந்து அற்புதத் திருவந்தாதி பாடினார். "பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும் நற்கணத்தினில் ஒன்றானேன் நான் என்று நயந்து பாடினேன்" என்று அற்புதத் திருவந்தாதி பாடப்பட்ட காரணத்தை விளக்குகிறார்.

பேய் வடிவோடு அவ்விடம் விட்டு அகன்று பற்பல இடங்களுக்குச் சென்று இறைவனது அருட்கோலங்களின் காட்சிகளைக் கண்டு களித்தார்; வியந்தார்; மகிழ்ந்தார். அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணி மாலை, பொன் வண்ணத்தந்தாதி ஆகிய நூல்களால் இறைவன் புகழைப் பாடிக் கொண்டே கயிலையை அடைந்தார். கயிலை சிவபெருமான் எழுந்தருளியுள்ள மலையாதலால் அதன் அடிவாரமானது சிவனடியாகவே எண்ணப்படும். அவனது திருவடியில் தமது தலை பொருந்த நடத்தலே தகுதி என்று அம்மையார் தலையாலே நடந்தார்.[3]

தலையினால் நடந்தேறும் அம்மையைக் கண்டு உமையவள் வியக்க,

"வருமிவள் நம்மைப் பேணும் அம்மை
காண் உமையே;மற்றிப்
பெருமை சேர் வடிவும் வேண்டிப்
பெற்றனள்"

என்று விளக்கிய விடையவன் "அம்மையே" என்ற அருள் மொழியை உலகமெல்லாம் உய்யும்படி அருளினான். 'நம்பால் இங்கு வேண்டுவதென்ன'? என்று ஈசன் வினவ, இறவாத இன்ப அன்பினை வேண்டியவர் பிறவாமை வேண்டும் என்று வரம் கேட்டார்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்."

என்பார் வள்ளுவர். அடியவர் அனைவரும் ஆண்டவனிடம் வேண்டுவது இப்பிறவாமையே யாகும்.

---

1. சேக்கிழார், பெரியபுராணம், காரைக்காலம்மையார் புராணம் (சி. கே.சு. உரை) பாடல் 1731.
2. ஈண்டு பரமதத்தனை இல்லாளன் என்பது சிந்தித்தற்குரியது. மாங்கனியிரண்டும் தனக்கேயாக்கி மனைவியார்க்கும் பிறர்க்கும் இல்லையாக்கிக் கொண்டவன். அதன் பயனும் அந்த 'இல்'லும் தனக்கில்லாதவனானான் என்கிறார் சி.கே.சு. பக்.386, பாடல் 1736.
3. தாடலை என்ற சாத்திரத்திற்கேற்ப அம்மையார் தலையாலே நடந்தாரென்கிறார் சி.கே.சுப்பிரமணிய முதலியார் பக் .874.

"பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானும்
உன்னைப் பரவுவனே!"

என்பார் மாணிக்கவாசகர் .

"யானே தவமுடையேன்; என் நெஞ்சே நன்நெஞ்சம் யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் " என்று அற்புதத் திருவந்தாதியிலும் பிறவாமையை வேண்டுகிறார்.

ஒருவேளை வினைப்பயனால் மீண்டும் பிறக்கின்ற நிலை வரினும் இறைவனை மறவாத தன்மையை இரண்டாவது வரமாகக் கேட்கிறார்.

"மீண்டும் பிறப்புண்டேல் நின் நாமம்
மறவாமை வேண்டும்"

என்கின்றார்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரம் தர வேண்டும்."

என்றார் நாவுக்கரசர்.

பிறவாமையையும் பிறப்பின் மறவாமை யையும் என்ற இரு நிலைகளும் இறைவன் வயத்தன. எனவே இவற்றுள் எதுவரினும் இறைவன் திருவடிக்கீழ் என்றும் நீங்காது பாடிக் கொண்டிருப்பதை இறுதி வரமாகக் கேட்கிறார். "உயிர் தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே". என்றபடி இறைவன் திருவடிக்கீழ் நின்று ஆனந்தமுறுகின்ற பேற்றையும் இறைவன் அருளினார். ""திருவாலங்காட்டில் ஆடும் மா நடமும் நீ கண்டு ஆனந்தம் சேர்ந்து எப்போதும் பாடுவாய் நம்மை" வரமருளினான் பரமன். மீண்டும் தலையாலே நடந்து திருவாலங்காட்டை அடைந்தார் அம்மையார். ஆலங்காடதனில் ஆலமுண்டவன் அண்டமுற நிமிர்ந்தாடுகிற கோலம் கண்டார்.

"'கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண்
வெண்பற் குழி வயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு பரடுயர் நீள்
கணைக்காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டில் தாழ்சடை
எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்தனலாடும் எங்கள் அப்பனிடம்
திருவாலங்காடே"

எனத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடினார்.

பதிகம் என்ற அமைப்பின் பாடல்களுக் கெல்லாம் காலத்தால் மூத்தவை அம்மையாரின் பாடல்களே ஆதலால் அவை **மூத்த பதிகம்** என்று சிறப்பிக்கப்படுகின்றன. மூத்த திருப்பதி கங்களிரண்டும் திருவந்தாதிக்கும், இரட்டை மணி மாலைக்கும் பின்னரே பாடப்பட்டன. எனினும் அம்மையார் விரும்பியபடியே இறைவன் ஆடும் திருவடிக் கீழ் இருந்து பாடிய பெருமை உடையன. ஆதலின் அவை பதினோராம் திருமுறையில் முதலிடத்தைப் பெறுகின்றன. இம்மூத்த திருப்பதிகங்கள் திருவாலங்காட்டில் இறைவன் ஆடுகின்ற அழகையும், அக்காட்டில் வாழும் பேய்களின் இயல்பையுமே பெரும்பாலும் காட்டுகின்றன.

இறைவன் ஆடும்போது துத்தம், கைக் கிளை, விளரி, தாரம், உழை, இளி, குரல், என்ற எழு வகையான ஓசையோடு கூடிய பண் பொருந்துமாறு பாடுகின்றானாம்!. அப்பாடலுக்கு ஏற்ப சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிதம், துந்துபி, தாளம் , வீணை, மத்தளம், கரடிகை, வன் கையில் ஏந்திய மெல்லிய தோலாலாகிய உடுக்கை, குடமுழா, மொந்தை என்ற இசைக் கருவிகளை வாசித்துக் கொண்டு, இவ்வொலிகளோடிணைந்து அப்பன் ஆலங்காட்டில் ஆடுகின்றானாம்!. ,இத்தகைய ஆடலைப் பற்றிய பாடல்கள் பத்தினையும் பாடி ஆட நம் பாவம் அடியோடகலும், என்று பதிகப் பயனையும் கூறுகின்றார்.

பிறவாமை வேண்டிய அம்மையார் இரட்டைமணி மாலையில் பிறவாமற்காக்கும் பிரானைப் போற்றுகின்றார். நாம் வணங்கும் தலைவன் சிவபெருமானே! அவனல்லால் வேறு தெய்வமில்லை, என்ற ஊறுதியும் தெளிவும் வேண்டும் . பிற தெய்வத்தைப் பற்றி நினைக்கக் கூசுதல் வேண்டும்; அவனைப் பற்றியே இடைவிடாது பேசுதல் வேண்டும். இங்ஙனம் மனத்தாலும் வாக்காலும் மறவாதிருப்பவரை மண்ணுலகில் என்றும் பிறவாமற் காப்பான் என்பதை

"ஈச னவனல்லாதில்லை என நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை காக்கும் பிரான்."

என்றுபோற்றுகின்றார். மண்ணில் பிறவாமல் காக்கும் பிரான் என்றமையால் தன்னடிக்கீழ் வைக்கும் பிரான் என்பது அருத்தாபத்தியால் புலப்படுத்துகிறார்

பேயுருவம் வேண்டிப் பெற்றதும் அம்மையார் பாடியது அற்புதத் திரு அந்தாதியாகும். முதற் பாட்டிலேயே அம்மையார் தாம் இளமையிலேயே சித்தத்தை சிவன் பால் வைத்திருந்ததை விளக்குகின்றார். "இவ்வுலகில் பெண்ணாகப் பிறந்து , மொழி கற்றுக் கொண்ட, பேசக் கற்றுக் கொண்ட பின்பு இளமைக்காலம் எல்லாம் நீலகண்டத்துப் பெருமானே, நின் பால் காதல் சிறந்து நின் சேவடியே புகலிடம் என நினைந்து சேர்ந்தேன். வானோர் இடர் தீர்த்த சிவபெருமானே! என் பிறவித் துன்பத்தை என்றைக்குத் தீர்ப்பாய்?" என வினவுகின்றார்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்- நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்."

என்று இறைவனை முன்னிலைப்படுத்தி வினவுகின்றார். நாம் இறைவனைப் போற்றுவது நம்மிடரைக் களைய வேண்டும், நமக்கு இரங்க வேண்டும், முக்தி நெறியினை நமக்குக் காட்டவேண்டும் என்பதற்காகவே! ஆனால் அம்மையாரின் அன்போ பயன் கருதாத பேரன்பாகத் திகழ்கிறது. மேற்கூறிய மூன்று வகையாலும் அவர் உதவாவிட்டாலும் அன்பு ஆறாது என் நெஞ்சு என்கிறார்.

"இடர் களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறி பணியாரேனுஞ் - சுடருருவில்
என்பறா கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு." என்கிறார்.

அம்மையாரின் அன்பு பயன் கருதிய அன்பல்ல. வீடும் வேண்டா விறல் என்ற சிறப்பினை அம்மையாரிடம் காண்கிறோம்.

இறைவனே! உம்மை எம் மனத்தினில் கண்டு, எந்தையே என்று துதித்து வணங்கி கைத்திருத்தொண்டு செய்யப் பெற்றிலேனேயாகில்வீடு பெறுவதாகினும் அதை நான் வேண்டேன்.

"கண்டெந்தை என்றிறைஞ்சி கைப்பணி யான்
செய்பேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன்"
என்று உறுதியாகக் கூறுகிறார்.

"தாயுமிலி தந்தையிலி தான் தனியனாகிய" இறைவனால் அம்மையே என்றழைக்கப்பட்ட வராதலின் அமமையார் தாயாம் தன்மை நிலையில் நின்று இறைவனிடம் உரிமை பாராட்டும் அன்பினைக் காண்கிறோம்.

"திங்களிது சூடிச் சில்பலிக் கென்று
ஊர்திரியேல்"
"அரவமொன்று ஆகத்து நீ நயந்து பூணேல்
பொன்னாரம் மற்றொன்று பூண்".
"நீ உலகமெல்லாம் இரப்பினும் நின்னுடைய தீய
அரவொழியச் செல்."

என்றிவ்வாறு வரும் பாடல்கள் அம்மையாரின் தாய்மை உணர்வை உணர்த்துகின்றன.

'உள்ளேன் பிற தெய்வம் உன்னை யல்லால் எங்கள் உத்தமனே' என்ற மணிவாசகரின் மணிமொழிக் கேற்ப சிவனுக்கு ஆளாகும் நிலை ஒன்றினையே நினைத்திருந்தார் அந்நிலையினையே துணிந்திருந்தார்; அந்நினைவை மட்டுமே உள்ளத்தினுள் அடைத்திருந்தார். இவ்வுறுதிப்பாடு அவருக்கு இருந்ததாலேயே,

"அறிவானும் தானே; அறிவிப்பான் தானே;
யறிவா யறிகின்றான் றானே;- யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே; விரிசுடர் பாரகாயம்
அப்பொருளுந் தானே யவன்"
என்ற உயர்ந்த நிலையை உணர முடிந்தது.

நாயன்மார்களுள் பெண்கள் மிகச் சிலரே. அவர்களுள்ளும் பாமாலை பாடி பரமனருள் பெற்றவர் காரைக்கால் அம்மையார் மட்டுமே. அவர் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு, திருவிரட்டை மணிமாலை அற்புதத் திருவந்தாதி என்ற நான்கு பிரபந்தங்களும் 11 ஆம் திருமுறையில் சிவபிரான் அருளிய "மதிமலி புரிசை மாடக்கூடல்" என்று தொடங்கும் திருமுகப் பாசுரத்தின் அடுத்து இடம் பெற்றுள்ளன.

சிவபிரானைப் பதிகம் பாடி வழிபடும் முறையினை முதன்முதலில் வகுத்தவர் அம்மையாரே. பதிகத்திறுதியில் திருக்கடைக் காப்பு கூறுதலும் அதில் தம் பெயரையும் பதிகம் ஓதுவோர் எய்தும் பயனையும் குறித்தலும் அவர் காட்டிய முறையேயாகும். ஞானசம்பந்தர் அம்மையாரின் முறையைப் பின்பற்றியே திருக் கடைக் காப்பும் பதிகப் பயனும் பாடினார் என்பர்.

அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணி மாலை இரண்டையும் மண்டிலமாகத் தொடரும் அந்தாதித் தொடையில் அமைத்து உள்ளார். இரட்டை மணிமாலையில் ஒரு கட்டளைக் கலித்துறையும் ஒரு வெண்பாவும் மாறி மாறி வர அந்தாதியாக அமைத்துள்ளார். இந்நூல்கள் அம்மையாரின் இலக்கண நுட்பத்தை எடுத்துரைக்கின்றன.

இங்ஙனம் செய்யுளமைப்பு அந்தாதி அமைப்பு, பதிகம் பதிகப் பயன் பாடல் போன்ற பல துறைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்ட பெருமையோடு தம் பாடல்களை இசையமைத்துப் பாடிய பெருமை உடையவராகவும் அம்மையார் விளங்கினார். இவரைத்தவிர கையிலை கண்ட நாயன்மார் வேறொருவரு மில்லை.என்பதும் குறிக்கத்தக்கது.

"ஆலங்காட்டடிகளை காரைக்காற் பேய் செப்பிய செந்தமிழ பத்தும் வல்லவர்கள் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவரே!"

என அம்மையாரே பதிகப் பயனை கூறியுள்ள படி அவருடைய பாடல்களைப் படித்து பயன் பெறுவோம்.



பழனியப்பர் தம் தம்பி அண்ணாமலையாருக்கு எழுதி வைத்த பொருண்மொழி

1. எனக்கு உடம்புக்கு இருக்கிற மாதிரி கடுமையாகவே இருக்கின்றது. இறைவன் அருளின் படி நடக்கட்டும் அதைப்பற்றிக் கவலைப்படுவது உசிதமன்று. வினை யுள்ள அளவுமே கூடிநிற்கும்.
2. இருப்பது பொய்; எந்நாளிருப்பினும் இறப்பது நிச்சயம்.
3. ஒருவரும் கொண்டுபோகக் கூடியது ஒன்றுமே இல்லை. பாவ புண்ணியம் இரண்டுமே பின் வருவது நிச்சயம்.
4. சன்மார்க்க சபையைத் தளர விடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக.
5. குடும்பத்தை ஒருநாளும் கவலைக்குள் விடாது கௌரவமாகவே கொண்டு வருக.
6. வியாபாரம் முதலியன அளவோடு செய்து வருக.
7. மற்றக் காரியங்களெல்லாம் நன்மையாகவும் சாந்தமாகவும் நடத்தி வருக.

மெய்கண்டார்

புலவர்மணி - சித்தாந்த வித்தகர்
முரு.பழ. ரெத்தினம் செட்டியார்

சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் முதலாமவராக விளங்கும் மெய்கண்டார் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவார். அவரைப் பற்றிய வரலாறு தக்க ஆதாரங்களோடு நமக்குத் தரப்படவில்லை. அவர் வரலாற்றில் புராண மணமும் செவி வழிச் செய்தி மணமும் கலந்து கமழ்வதைக் காண்கிறோம்.

திருப்பெண்ணாங்கடம் எனும் ஊர் விருத்தாச்சலத்திற்கு அருகே இருக்கிறது. அவ்வூரில் 750-800 ஆண்டுகளுக்கு முன் சைவ வேளாளர் குலத்தைச் சார்ந்த அச்சுத களப்பாளர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நீண்ட காலமாக மகப்பேறு வாய்க்க வில்லை.

தம் குல குருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரிடம் இக்குறையினை அவர் ஒரு நாள் விண்ணப்பித்தார். சிவாச்சாரியார் திருமுறை ஏட்டில் கயிறு சாத்திப் பார்த்தார். திருமுறையில் கயிறு சாத்திப் பார்க்கும் மரபு 800 ஆண்டுத் தொன்மையுடையது என்பது இதிலிருந்து தெரிகிறது.

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவாயினவே வரம் பெறுவர்." என்னும் ஞான சம்பந்தரின் இரண்டாம் திருமுறை திருவெண்காட்டுத் திருப்பதிகப்பாட்டு அருணந்தி சிவாச் சாரியார் கயிறு சாத்திப் பார்த்ததில் வந்தது.

திருவெண்காடு சென்று அங்குள்ள முக்குளத்தில் நீராடி இறைவன் திருமுன் அத்திருப்பதிகத்தை ஓதி வழிபாடு செய்யுமாறு சிவகுரு அச்சுதக் களப் பாளரைப் பணித்தார். மகப்பேறு இல்லாதோர் இன்றும் இத்திருப்பதிகத்தை ஓதிப் பயன் பெறலாம்.

அச்சுத களப்பாளரும் அவர் தம் மனைவியாரும் திருவெண்காடு சென்று சில நாட்கள் அங்கு தங்கி இருந்து வழிபாடு செய்து ஊர் திரும்பினர்.

சில மாதங்கள் கழிந்ததும் அச்சுத களப்பாளரின் மனைவி கருவுற்றார். உரிய நாளில் குழந்தை பிறந்தது. அதற்குத் திருவெண்காடர் எனப் பெயர் இடப் பெற்றது.

திருவெண் காடரின் தாய்மாமன் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்தார். அவர் அச்சுதகளப்பாளரின் அனுமதி பெற்றுக் குழந்தையை எடுத்துப் போய்த் திருவெண்ணெய் நல்லூரில் வளர்த்து வந்தார். குழந்தைக்கு ஈராண்டுப் பருவம் எய்தியது. ஒருநாள் குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. நந்தி அருள் பெற்ற அகச்சந்தான ஆசிரியருள் ஒருவராகிய பரஞ்சோதி முனிவர் வான் வழியாகப் பொதிகை மலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அக்காலத்தில் வான ஊர் தியும் இருந்திருக்கிறது. முனிவர் தம் யோக ஆற்றலால் பறக்கும் வன்மை

"திருவெண்காடரின் முகத்தை வான் வழி ஏகிய முனிவர் கண்ணுற்றார். சிவ ஞானம் பெறும் பக்குவம் குழந்தையிடத்தே விளங்குவதை கண்டார். வானிலிருந்து கீழிறங்கி வந்து குழந்தைக்கு மெய்ஞ்ஞான உபதேசம் செய்வித்தார். மெய்கண்டார் என தீக்ஷா நாமம் சூட்டினார்"

உடையராயும் இருந்திருக்கின்றனர். பரஞ்சோதியார் தம் யோக ஆற்றலால் பரந்து சென்றிருக்கின்றார்.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த திருவெண்காடரின் முகத்தை வான் வழி ஏகிய முனிவர் கண்ணுற்றார். சிவ ஞானம் பெறும் பக்குவம் குழந்தையிடத்தே விளங்குவதைக் கண்டார். வானிலிருந்து கீழிறங்கி வந்து குழந்தைக்கு மெய்ஞ்ஞான உபதேசம் செய்வித்தார். மெய்கண்டார் என தீக்ஷா நாமம் சூட்டினார். சிவஞான போதம் எனும் பெயரில் நூல் செய்யுமாறு பணித்து முனிவர் விண்வெளி திரும்பிச் சென்றார்.

ஈராண்டில் மெய்ஞ்ஞான உபதேசம் பெற்ற மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த பொல்லாப் பிள்ளையார் திருமுன் நிட்டை கூடி அவரருளால் சிவானுபூதி பெற்று சிவஞான போதம் எனும் சைவ சித்தாந்த முடிமணி நூலை ஆக்கித் தம்மை அணுகிய நன் மாணாக்கர் பலருக்கு உபதேசித்தருளினார்.

ஈராண்டுக் குழந்தை சிவ ஞானம் பெற்ற செய்தி நாடெங்கும் பரவியது. பல ஊர்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான மக்கள் மெய்கண்டாரைக் காண வந்தனர். வந்தவர்களுள் மெய்கண்டாரும் குல குருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரும் ஒருவராவர்.

மெய்கண்டார் சிவஞானபோத நூலை மாணாக்கருக்கு உபதேசிப்பதைக் கண்ணுற்ற அருணந்திசிவம் அவரை நோக்கி ஆணவ மல சொருபம் எத்தகையது ? என ஒரு வினாவை எழுப்பினார். மெய் கண்டார் அவரை தலை முதல் கால் வரை தம் திருக் கண்களால் பார்த்து விட்டு வாளா இருந்தார். சிவாச்சாரியர்க்கு அநுபூதி ஞானம் உதயமாயிற்று. ஆணவமல சொருபத்திற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பு வகையால் தம்மையே ஆசிரியர் சுட்டியிருக்கிறார் என்பார் அருணந்தி சிவம். மெய்கண்டார் கால்களில் வீழ்ந்து அருளுபதேசம் செய்யுமாறு வேண்டினார். மெய் கண்டார் அவருக்கு மெய்ஞ் ஞானத்தை அறிவுறுத்தித் தாம் செய்துள்ள சிவஞான போதத்திற்கு விளக்க உரையாகச் செய்யுள் நடையில் சிவஞான சித்தியாரைச் செய்யுமாறு பணித்தார். அவ்வாறே அருணந்திசிவம் சிவஞான சித்தியார் என்னும் நூலைச் செய்தருளினார்.

அருணந்தி சிவம் உள்ளிட்ட 49 மாணாக்கர் மெய்கண்டாருக்கு அமைந்தனர் என நூல்கள் கூறுகின்றன. அவர்களுள் உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலைச் செய்த மனவாசகம் கடந்தாரும் ஒருவராவார்.

மெய்கண்டார் இவ்வாறு மாணாக்கர் பலருக்குச் சைவசித்தாந்த உண்மைகளை எடுத்துரைத்துச் சின்னம் சிறு பருவத்தே பொல்லாப்பிள்ளையார் திருமுன் ஞான நிட்டை கூடிப் பரிபூரணம் எய்தினார். இந்த அளவே மெய்கண்டார் வரலாறு நமக்குக் கிடைத்திருக்கிறது.

வரலாறு எவ்வாறு இருப்பினும் திருமுறைகளில் சுருக்கமாகக் குறிப்பிடப் பெற்ற சைவசித்தாந்தக் கருத்துக்களை விரிவு செய்து, ஒழுங்கு படுத்தி இ∶தே சைவசித்தாந்தம் என உலகிற்கு வெளிப்படுத்தியவர் மெய்கண்டார் ஆவார்.

அவர் இல்லையேல் பல்வேறு அகச் சமயக் கருத்துக்களும் புறச் சமயக் கருத்துக்களும் சித்தாந்தத்திற்குள் புகுந்து இன்னது தான் சித்தாந்தம் என யாரும் அறிய முடியாத வகையில் அதனைச் சிதறடித்திருக்கும். சித்தாந்தத்தைக் காத்த பெருமை மெய்கண்டார்க்கே உரியதாகும்.

சிவஞான போத முதற் சூத்திரம், அவன், அவள், அது என அவை மூவினைமையின் எனத் துவங்குகிறது. காலம் இடம் இரண்டிற்கும் உட்பட்ட பொருளே அழியும். அவற்றையே நாம் சுட்ட முடியும். காலத்திற்கும், இடத்திற்கும் உட்படாத பொருள் அழியாது. அதனை நாம் சுட்டமுடியாது. சுட்டப்படும் பொருட்கள் அழியுமாதலால் அவற்றைத் தோற்றுவிக்கவும், அழிப்பிக்கவும் சுட்டப்பட முடியாத அதாவது காலம் இடம் இரண்டிற்கும் உட்படாத என்றும் உள்ள ஒரு பேரறிவுப் பொருள் இருந்தே ஆகவேண்டும். அப்பொருளினையே கடவுள் எனநாம் கூறுகிறோம். இக்கருத்தினை உணர்த்துவதற்காகவே மெய்கண்டார், அவன், அவள் , அது எனச் சுட்டுப்பெயர்ச் சொற்களால் சூத்திரத்தை ஆக்கியிருக்கிறார். இந் நயத்தினை அறியாத வடமொழிச் சிவபோத ஆசிரியர் ஆண், பெண், அலி எனச் சூத்திரத்தைத் துவக்கியுள்ளார். ஆண், பெண், அலி எனக்கூறுவது அவன் அவள், அது என்பதற்கு உரையாக அமையுமே அல்லாமல் சுட்டுப்பொருள் அழியும் என்ற சித்தாந்தக் கருத்தை உணர்த்தாது. இதிலிருந்து சூத்திரநுட்பம் அறியாத யாரோ ஒருவர் தமிழ்ச் சிவஞானபோதத்தை வட மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார் என்பது புலனாகிறது. இங்ஙனம் இருக்க வடமொழியில் ரௌரவ ஆகமத்தில் சிவஞானபோதம் உள்ளதென்றும் அதனையே மெய்கண்டார் தமிழில் மொழிபெயர்த்தார் என்றும் சொல்வது நகையினை விளைவிப்பதாக இருக்கிறது. வடமொழிச் சிவஞானபோத இறுதியில் சிவஞானபோத சைவார்த்த நிர்ணயம் செய்யப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சிவஞான போதத்தில் சைவார்த்த நிர்ணயம் செய்யப்பட்டது என்பது இதன் பொருள். இத்தொடர் தமிழ்ச் சிவஞானபோதத்தில் இல்லை. தமிழ்ச் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பாக இருந்தால் அதில் தான் இத்தொடர் அவசியம் இடம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வடமொழிச் சிவஞான போதத்தில் இடம் பெற்றிருப்பதால் அதுதான் மொழிபெயர்ப்பு என்பதும் தமிழ்ச்சிவஞான போதம் மூலம் என்பதும் தாமே பெறப்படுகின்றன. வடமொழிச் சிவஞான போதக்காரர் உண்மையை மறைக்காமல் சொல்லியிருக்கிறார். சிவஞான முனிவர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அவர்கள் காலத்தில் வடமொழிக்கிருந்த செல்வாக்கினை நோக்கி எல்லாவற்றிற்கும் வடமொழி மூலம் என ஒருசம்பிரதாயமாகச் சொல்லி வந்திருக்கின்றனரே அல்லாமல் மனப் பூர்வமாக அக்கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வடமொழிச் சிவஞான போதச் சூத்திரங்களுக்கு அவர்கள் மிக வலிந்து அனுமதி சொல்வதிலிருந்து அறியலாம்.

பதினோராம் திருமுறையில் வரும் பட்டினத்தடிகள் மெய்கண்டார்க்கு முன்னர் இருந்தவராவார். பிற்காலத்துப்பட்டினத்தடிகள் வேறு அவர் வேறு என்பதை பாநடையே தெள்ளத்தெளிய உணர்த்தும். திருமுறைப் பட்டினத்தடிகள் "அது அவள் அவன் என நின்றமை யார்க்கும் பொதுநிலையான் என உணர்த்திய பொருளே " எனப்பாடியுள்ளார். அவரை அடியொற்றி மெய்கண்டார் தம் சூத்திரத்தைத் திருமுறைத்

தமிழில் துவங்க இருக்கிறார் என்பது ஈண்டு நினைவு கூரத்த தக்கது.

சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்தில் வட மொழி உபநிடதங்களில் வரும் அத்துவிதம் என்னும் சொல்லுக்கு மெய்கண்டார் தமிழ் மரபு பற்றிப் பொருள் கண்டுள்ளார். "அவையே தானே ஆயிருவினையின்" எனும் தொடரில் அவையே என்பது ஒன்றாகி நிற்றலையும் இரட்டுறமொழிதலால் அவையே தானே என்பது உடனாகி நிற்றலையும் தானே என்பது வேறாகி நிற்றலையும் உணர்த்தும். அத்துவிதம் என்பதற்கு இரண்டில்லை என்றே சங்கரர், ராமானுசர், மாத்துவர், முதலிய வடமொழி உரைகாரர் அனைவரும் பொருள் கண்டனர். அத்துவிதம் என்பதற்கு இரண்டில்லை என்றால் இரண்டு அல்லாதது எனக் கொண்டு ஒரு நோக்கில் ஒன்றாகியும் மற்றொரு நோக்கில் வேறாகியும் நிற்பதே என மெய்கண்டார் கூறியிருக்கிறார். இதனையே அவையேதானே என்னும் தொடரால் உணர்த்தியிருக்கிறார். இப்பொருள் வடமொழியாளர் அனைவருக்கும் இன்றளவும் புதியதே ஆகும். அவர்களுள் யாரும் இப்பொருளைச் சொல்லவில்லை. ஞான சம்பந்தர் ஒன்றாய் வேறாய் உடனானான் விழி மிழலையே எனப்பாடியுள்ளார். அவர் வாக்கை ஆதாரமாகக் கொண்டே மெய்கண்டார் அத்துவிதம் என்னும் வடசொல்லுக்குப் பொருள் கண்டார். அவர் கண்ட பொருள் தமிழ் மரபை ஒட்டியதாதலால் வடமொழி வேத உபநிடதங்களுக்குச் சைவர்கள் தமிழ் மரபை ஒட்டியே பொருள் கொள்ள வேண்டும் என்பது புலனாகும்.

இறைவன் "வானாகி மண்ணாகி வளியாகி" நிற்றல் அவன் கலப்பால் ஒன்றாகி நிற்றலைக் குறிக்குமே அன்றி அவனே வானமாகவும் மண்ணாகவும் ஆகின்றான் என்பதைக் குறிக்காது. 'கலந்து நின்ற பெரியானை' என்பது அப்பர் வாக்கு. மாயை தனிப் பொருள் எனவும் வானம் மண் முதலிய பூதங்களை அதனின்றும் இறைவன் உண்டாக்கு கின்றான் எனவும் மெய்கண்டார் தெளிவு செய்துள்ளார். வடமொழியாளர் இறைவனே உலகாகினான்' என்றும் அவன் சத்தியே 'உலகாகப் பரிணமிக்கிறது' என்றும் உலகம் அவனுக்குச் சரீரம் என்றும் பலவாறாகக் கூறித் தத்துவக் குழப்பம் செய்திருக்கின்றனர்.

மூன்றாம் சூத்திரத்தில் எனது உடல் என்றலின் ஆன்மா வேறு உடல் வேறு என மெய்கண்டார் கூறுகிறார். 'எனதுடல்' என்னும் போது நம்மின் வேறாய் உடல் இருக்கிறதென்றும் உணர்வு தோன்றுகிறது. 'என் ஆன்மா' என்னும் போது அத்தகைய உணர்வு தோன்றவில்லை. அந்த உணர்வு அடிப்படையில் தான் எனதுடல் என்றலின் ஆன்மா வேறு என மெய்கண்டார் கூறுகிறாரே அல்லாமல் மொழி இலக்கண அடிப்படையிலோ உலக வழக்கு அடிப்படையிலோ கூறவில்லை. என அறிதல் வேண்டும்.

நான்காம் சூத்திரத்தில் ஆணவமலம் இருள் போல் உயிர் அறிந்து மறைக்கும். அது சகசமலம் மாயை ஒளி இருளை ஓரளவு நீக்கும். அது இறைவனால் உயிரிடத்தே கூட்டுவிக்கப் பெறும் மலமாகும். இரண்டும் வெவ்வேறு இரண்டும் 'அநாதி' என மெய்கண்டார் விளக்குகிறார்.

ஐந்தாம் சூத்திரத்தில் 'இறைவன்' துணையால் தான் உயிர் அறியும் தானே அதனால் அறிய முடியாது. ஆனால் இறைவன் அந்தந்த ஆன்மாக்களுக் கேற்பத் துணை செய்ய வேண்டி யிருப்பதால் அவன் அருட்சத்தி நேரடியாகச் செயல்படாமல் மறைப்புச் சத்தியாகச் செயல்படுகிறது என உணர்த்துகிறார். ●

ஆறாம் சூத்திரத்தில் இறைவனை அறிய முடியாதென்றால் அவனால் நமக்குப் பயனில்லாமல் போகும். அறிய முடியும் என்றால் சுட்டி அறியப்படும் பொருள் அழியுமாதலால் அவன் அழியும் தன்மை உடையவன் என்றாகிவிடும். உயிர் அறிவாலும் கருவிஅறிவாலும் இறைவனை அறிய முடியாது. இறை அறிவால் அதாவது பதிஞானத்தால் அவனருளை ஒன்றாக அறியலாம் எனத் தெளிவுசெய்கிறார்.

ஏழாம் சூத்திரத்தில் சடப் பொருளால் ஆகிய உலகம் அறிவற்றது. அது கடவுளை அறியாது அறியவும் முடியாது. இறைவனுக்குச் சடப் பொருளை அறிந்து அநுபவிக்க வேண்டிய தேவை எவ்வாற்றானும் இல்லை. எனவே உயிரே இறைவனையும் உலகையும் அறியும் தன்மையும் உரிமையும் உடையது எனக்கூறி நம்மை ஞான நெறிக்கு அழைத்துச் செல்கிறார்.

எட்டாம் சூத்திரத்தில் இறைவனே குருவாக வந்து ஞானத்தை உணர்த்துவான் என்றும் அவனைத்தவிர வேறுயாரும் வியாபக நிலையை உணர்த்த முடியாததாதலால் அவனே மானிடச் சட்டை போர்த்திச் சகலராகிய நமக்குக் குருவாக வருவான் என்றும் சிவன் முத்தரை ஆவேகித்து நின்றும் இதனைச் செய்வான் என்றும் அப்படிச் செய்தாலும் அ து அவன் செய்கின்ற உபதேசமே என்றும் அறிவுறுத்துகிறார்.

ஒன்பதாம் சூத்திரத்தில் ஞான சாதனையை விவரிக்கின்றார். சிவோகம் பாவனை செய்தல் ஐந்தெழுத்தை போதித்தல் அந்தரியாகப் பூசை செய்தல் முதலியன ஞானச் சாதனை என்றும் இவற்றை இறைவன் குருவாக வந்து உணர்த்திய பதிஞானம் ஒன்றாகக் கொண்டு செய்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

பத்தாம் சூத்திரத்தில் தற்செயலற்று எல்லாம் அவன் செயலே என உயிர் பரிபூரண சரணாகதி செய்து நின்றால் மலங்களின் தாக்குதல் ஒழிவதோடு தூய நிலை கைகூடி திருவருள் தரிசனம் கிட்டும் என்று சொல்கிறார்.

பதினோராம் சூத்திரத்தல் திருவருள் தரிசனத்தால் உயிருக்கு இறைவனிடத்தே அன்பு மீதூரும் என்றும் அந்த அன்பே பரிபூரண ஞான நிட்டையைக் கூட்டுவிக்கும் என்றும், சைவ சித்தாந்தத்தில் அன்பே சாதனம் என்றும், உயிர் பரமுத்தியில் பெறுகின்ற சிவபோகத்தை உடலோடு நின்றே நுகரும் நிலை சீவன்முக்த நிலை என்றும் உடல் நீங்கியதும் உயிர் பரமுத்தியை எய்தும் என்றும் மாறாத பேரின்பத்தை நுகரும் என்றும் தெரிவிக்கிறார்.

பன்னிரண்டாம் சூத்திரத்தில் சிவன் முக்தி தரும் உலகிடை இருக்கும் போது திருக்கோயில் வழிபாடு அடியார் வழிபாடு முதலியன செய்தல் வேண்டுமென்றும் அவ்வழிபாடு இயல்பாக அவருக்குப் பேரானந்தத்தை விழைவிப்பதோடு மலவாசனை தாக்கா வண்ணம் அவர்களைக் காக்கும் என்றும் கூறி நிறைவு செய்கிறார்.

பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் அதிகரணங்களும் வெண்பாக்களும் மெய்கண்டாரே செய்து பொருள் விளக்கம் அளித்துள்ளார். சிவஞான சுவாமிகள் சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும் பேருரையும் எழதியுள்ளார். இவ்வுரைகளைப் படித்தால் மெய்கண்டார் கருத்துக்கள் தெளிவாகப் புலனாகும்.

பட்டினத்தார்

டாக்டர் வெ. பழனியப்பன்
எம்.ஏ. எம்.லிட். பிஎச்.டி.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தோன்றிய நன்மக்களுள் பட்டினத்தார் குறிப்பிடத்தக்கவர். இறைவனின் திருவருளைப் பெற்றுக் கவிபாடி அப்பொருமானைப் பணிந்து போற்றிய சான்றோர்களை அருட் கவிஞர்கள் எனத் தமிழுலகு போற்றுகின்றது. இக்கவிஞர் மரபு தனி மரபாக வளர்ந்து வந்துள்ளது. இம் மரபில் தோன்றிய சான்றோரே பட்டினத்தார் ஆவர்.

பட்டினத்தார், பட்டினத்தடிகள் பட்டினத்துப்பிள்ளை, பட்டினத்துச் செட்டியார் , திருவெண்காட்டிகள் என்ற பல பெயர்களை நாம் தமிழ் இலக்கிய வரலாற்றால் அறிகிறோம். ஒரே பெயருள்ள புலவர் பெருமக்கள் பலர் தமிழ் இலக்கிய உலகில் செங்கோலோயுள்ளதனை நாம் நன்கு அறிவோம். நக்கீரர் , கபிலர், கல்லாடர், ஔவையார், பேராசிரியர் முதலிய புலவர் பெருமக்கள் இதற்குச் சான்றாவர். இவ்வரிசையில் பட்டினத்தாரும் இடம் பெறுகிறார்.

வளமிக்க செல்வக் குடும்பத்துட் பிறந்து நலமிக்க நல்ல வாழ்க்கைத் துணையை ஏற்று, இல்லறநெறியினை இனிது நிகழ்த்தி, பிறவி நோய்க்குப் பெருங்காரணமாகிய அவாவை அறவே நீத்து, துறவறத்தை மேற்கொண்டமையால் அடிகள் என்ற சிறப்பு இவருடைய பெயருடன் இணைந்தது. இவர் பாடிய திருவிடை மருதூர் மும்மணிக்கோவையின் இறுதிப்பாடலில்

"சிரத்தினு மாய் என்றன் சிந்தை
யுள்ளாகி வெண்காட னென்னும்
தரத்தினு மாயது நின்னடியாம்
தெய்வத் தாமரையே"

என்று குறிப்பிடுதலால் திருவெண்காடர் என்பது இவர் தம் இயற்பெயர் என்பர். துறவு நெறியால் அடிகள் என்ற சிறப்புப் பெற்று திருவெண்காட்டடிகள் என்று அழைக்கப்பெற்றார்.

புகார் என்னும் காவிரிப் பூம்பட்டிணத்தில் பிறந்தமையால் பிறப்பிடத்தினடியாகப் பட்டினத்தார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார் என்றும் கூறுவர். பட்டினம் என்ற பழங்குறிப்பு காவிரிப்பூம் பட்டினத்தையே குறிப்பிடுவதாகும் என்ற உண்மை பட்டினப்பாலை என்ற சங்கப்பாடலால் விளங்குவதாகும்.

பட்டினத்துப்பிள்ளை என்ற வழக்குடையதே யன்றி இப்பெயருக்கான ஆதாரம் எதுவும் தெரியவில்லை.

இங்குக் குறிப்படப் பெறும் பல்வேறு பெயர்களும் ஒருவரையே குறிப்பன என்பது ஆய்வுலகில் ஏற்புடையது அன்று. திருமுறை வரலாறு எழுதிய பேராசிரியர் க. வெள்ளைவாரணர் அவர்கள் பதினோராம் திருமுறையில் இடம் பெற்ற பட்டினத்தாரை ஒருவராகவும் பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டில் இடம் பெற்றுள்ள கோயில் திருவகவல் முதலியவற்றைப் பாடிய பட்டினத்தாரை ஒருவராகவும் ஆக இருவராகக் கொள்வர் . நூற்றாண்டு இலக்கிய வரலாறு எழுதிய அறிஞர் மு. அருணாச்சலம் அவர்கள் முன்னவரைத் திருமுறைப் பட்டினத்தார் என்றும், பின்னவர் சித்தர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மையால் சித்தர் பட்டினத்தார் என்றும் முதல்வன் முறையீடு, புலம்பல்,இரங்கல், பட்டினத்தார் ஞானம்,

என்பவற்றைப் பாடியவர் பிற்காலப் பட்டினத்தார் என்றும் மூவராக கொள்கின்றார்.

பதினோராம் திருமுறையில் திருவெண்காட்டடிகள் பாடிய பிரபந்தங்களும், பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டில் உள்ள பாடல்களும் சொல் நடை, பொருளமைதியால் மாறுபட்டுள்ளன. மேலும் திருப்பாடற் றிரட்டில் ஒப்பாரி, ஒய்யாரி, சவ்வாது, சலவை, கலங்கிறண்டா. வேலை மினக்கிட்டு முதலிய பிற்காலச் சொற்களும் கீழ்மக்கள் வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளமையால் இருவரும் வெவ்வேறானவர் என்பது வெளிப்படை.

பத்திரகிரியார் திருப்புலம்பல் பாடியதனைத் தொடர்ந்து அருட்புலம்பல் இறந்த காலத்திரங்கள் முதலியவற்றைப் பாடிய பட்டினத்தார் இவர்களினும் வேறான மூன்றாமவர் ஆவர்.

பட்டினத்தார் காலம்

பட்டினத்தார் பாடிய பிரபந்தங்கள் 11 ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளமையால் அத்திரு முறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிக்கு (கி.பி.1000 1040) காலத்தால் முற்பட்டவர் ஆவர். திருமுறைப் பட்டினத்தார் தமது பாடல்களில் தேவார மூவர்களைக் குறிப்பிட்டுள்ளதோடு "திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்" என மணிவாசகரையும் குறிப்பிடுகிறார். மணிவாசகர் முதலாம் வரகுண பாண்டியனின் (கி.பி. 792-835)காலமாகிய கி.பி. 9 நூற்றாண்டினர் என்பது அறிஞர்கள் துணிபு. பட்டினத்தார் வரகுணனின் சிவப்பணிகளை மிகவும் போற்றி உரைத்துள்ளார். இவ்வரகுணன் இரண்டாம் வரகுணனே ஆவன். எனவே திருமுறைப்பட்டினத்தார் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது நேரிது.

பட்டினத்தார் திருப்பாடற் றிரட்டில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய பட்டினத்தார் சித்தர் பட்டினத்தாராவர். இவர் வாழ்க்கையுடன் தொடர்புடையவர் பத்திரகிரியார். இவர் காலம் ஏறத்தாழ கி.பி.14 ஆம் நூற்றாண்டு ஆதலால் சித்தர் பட்டினத்தார் காலமும் கி.பி.14ஆம் நூற்றாண்டேயாகும்.

மூன்றாவது பட்டினத்தார் இவர் களுக்கு மிகவும் காலத்தால் பிற்பட்டவர் ஆவர்.

"நூல்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் இப்படியிருந்தாலும் ஆசிரியர் வரலாற்றைப் பொறுத்தவரையில் வழங்கி வருவது ஒரே வரலாறுதான். அதுவும் சித்தர் பட்டினத்தார்க்கே பொருந்தக் கூடியது."[2] என்பர் அறிஞர் மு. அருணாசலம்.

பட்டினத்தார் வரலாறு

பட்டினத்துப்பிள்ளையார் புராணம் என்ற நூல் தம்காலத்து வழங்கிய பட்டினத்தார் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்றது. தொழுவூர் வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்கள் எழுதிய திருவெண்காட்டடிகள் சரித்திரம் என்ற நூல் பட்டினத்தார் புராணத்துள் சில இடங்களில் மாறுபடுகின்றது. தண்டபாணி சுவாமிகளால் எழுதப்பெற்ற புலவர் புராணம் என்ற நூல் இவற்றினின்றும் மாறுபட்ட செய்திகளைக் கூறுகின்றது. மாறுபட்ட இவ்வரலாறு களேயன்றி உண்மை வரலாற்றினை அறிந்து கொள்வதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும் மரபு வழியாக வழங்கும் பட்டினத்தார் வரலாறு ஒன்று உண்டு. அவ்வரலாறு கூறும் செய்தி:-

சோழநாட்டில் காவிரிப் பூம்பட்டிணதில் பெருவணிகர் மரபில் சிவநேசச் செட்டியார் ஞானகலை என்னும் பெற்றோருக்கு மகவாகத் தோன்றினார் பட்டினத்தார்.

சிவகலை என்னும் அம்மையாரை மணந்து சிவபூசைச் செல்வராய் இல்லறம் நடத்தினார். குலத் தொழிலில் பெரும்பொருள் ஈட்டினார். ஆனால் மகப்பேறின்றி வருந்தி வில்வ மரத்தடியில் குழந்தையாகயிருந்த திருவிடைமருதூர்ப் பெருமான் மருத வாணரை சிவசருமர் என்ற ஆதிசைவர் வழியாகப் பொருள் கொடுத்துப் பெற்றார். பிள்ளைக்கு மருதவாணர் என்று பெயரிட்டு வளர்த்தார். மருதவாணர் 16 வயது நிரம்பிய நிலையில் கடல்வாணிபத்தில் பெரும்பொருளீட்டி வீடு திரும்பினார். அதுகாலை “காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே” என்ற சொற்களை எழுதிய ஓலை நறுக்கு ஒன்றையும் காதற்ற ஊசியையும் ஒரு பெட்டியில் வைத்துத் தாய்வழி தந்தையிடம் சேர்ப்பித்து மறைந்தார். தந்தைக்கு இதுவே குருவின் அறிவுரையாயிற்று. பின்னர் உண்மை ஞானம் விளங்கப் பெற்றுத் தம்மிடம் வளர்ந்தவர் மருதப்பிரானே என்பதனை உணர்ந்து தம் பொருள்களைத் தம் அமைச்சர் நாங்கூர்ச் சேந்தர் வழியாகச் சூறையிட்டு வீட்டை விட்டு வெளியேறித் துறவியானார். பின்னர் பிச்சையேற்றுக் காலங்கழித்தார். இந்நிலையில் இவருக்கு ஏற்பட்ட சோதனைகள் மிகப்பல பொருளை விரியோகித்த சேந்தனாருக்கு அரசனால் ஏற்பட்ட துன்பத்தை இறைவன் திருவருள் கொண்டு நீக்கினார். மலபரிபாகம் கை கூடிய நிலையில் உடல் நீங்கும் காலத்தை எதிர்நோக்கி இருந்தார். தம் தாய் காலமானபோது ஞானாக்கினியால் எரியச் செய்து இறுதிக் கடன்களை முடித்தார். துளுவ நாட்டு மன்னன் பத்திரகிரியாரை ஆட்கொண்ட நிலையில் அவன் இவர் மாணாக்கராகித் திருவிடை மருதுரில் முத்தி பெற்றார். பின்னர் பட்டினத்தார் நாட்டின் பல இடங்களிலும் சுற்றித் திரிந்து முடிவில் திருவொற்றியூர் அடைந்து இறைவனைப்பாடிக் கடற்கரையில் கோபாலச் சிறுவர்களுடன் விளையாடிச் சிவப்பேறெய்தினார்.

திருமுறைப் பட்டினத்தார்

திருவெண்காடர் என்பது இவர்தம் இயற்பெயர். கி.பி.10 ஆம் நூற்றாண்டினர். இல்லறத்தில் பெருஞ்செல்வத்தை அனுபவித்து ஆன்மார்த்த சிவபூசை மேற்கொண்டு துறவறம் பெற்றவர்.

இவர் சமயக் குரவர்களின் வழிநின்று அவர் மொழிப்பொருளுணர்ந்து சமயநெறி நின்று, பதிதோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவித் தமிழ் வளர்த்த பெருமைக் குரியவர்.

இலக்கிய ஆராய்ச்சிமிக்க இவர் கல்வி கேள்விகளில் சிறந்து கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒரு பா ஒருபது என்ற ஐந்து பிரபந்தங்களை பாடியுள்ளார். இவைகள் பதனோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் சொற்செறிவும் பொருட் பொலிவுமுடையன. கற்பவர்க்குக் களிபேருவகை அளிப்பன. சங்கச் சான்றோர் பாடல்கள் போலச் செந்தமிழ் நடையில் அமைந்தன.

இப்பிரபந்தங்களில் இவர் அவ்வத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனின் சிறப்பினை எடுத்து ரைப்பதோடு இறைவன் அடியார்க்கு அருள் புரியும் திறத்தினையும் விரித்து ரைத்துள்ளார். பிறவிக் கடலில் அழுந்தித் துன்புறும் உயிர்களுக்கு இறைவன் திருவடியே இனிய தெப்பம் என்பது இவர் தம் கருத்து. திருவைந்தெழுத்தினை ஓதியுணர்ந்தால் இல்லறம் துறவறமாகிய இரு நிலையிலும் பேரின்ப வாழ்வைப் பெறலாம் என்பது இவர் தம் நம்பிக்கை . வீடுதோறும் பிச்சையேற்று இறைவனடி யார்க்குத் தொண்டு செய்யும் வாழ்வு அரச வாழ்வினும் பெருவாழ்வு என்பது இவர்தம் அனுபவம்.

கோயில் நான்மணிமாலை

தில்லையம்பலத்தைப் போற்றும் கருத்துடைய செந்தமிழ்ப் பனுவல் இந்நூல். வெண்பா , கலித்துறை, விருத்தம் , அகவல் என்னும் நால்வகைப் பாக்களால் ஒன்றனையடுத்து ஒன்றாக நால்வகை மணிகளால் தொகுக்கப் பெற்ற மாலைபோல் திகழ்வதால் நான்மணிமாலை என்றழைக்கப் பெறுகிறது. இவ்வகைப் பிரபந்தத்திற்கு இதுவே மூல இலக்கியமாகும்.

இறைவனை நினைந்து வழிபடாது வயிறு வளர்த்தற் பொருட்டு பிற உயிர் களுக்குத் தீங்கு செய்து வாழ்வோர் உலக நிலையாமையைச் சிறிதும் உணராதவர் என்பதனை ஓர் அழகான உவமையால் விளக்குகின்றார்.

"நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நென்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்பு தன்வாய்க்கெதிரி வந்த
தேரையை வவ்வியாங்கு"

என்பது அவ்வுவமை. கொடிய நஞ்சினைக் கக்கும் பிளந்த வாயினை யுடைய பெரும்பாம்பு நெற்பயிரில் சுற்றிக் கிடக்கும் சிறிய நீர்ப்பாம்பின் உடலைக்கவ்வ அந்நீர்ப் பாம்போ தன் வாய்க்கெதிரே வந்த தவளையைக் கவ்வியாங்கு உயிர்கள் பிறந்த நாள் தொட்டு எமனின் வேல் நுதியை ஒத்த பற்களிடையே அகப்பட்டுக் கிடந்தும் சிறிதும் இரக்கமின்றி இழிந்த வயிற்றினை வளர்த்தற் பொருட்டு பல்லு யிர்களின் உடம்பினைக் கொன்று தின்று இழிவாழ்வு வாழ்கின்றன என்று அரற்றுகின்றார்.

திருக்கழுமல மும்மணிக்கோவை

கழுமலம் என்பது சீகாழிப் பதியாகும். இப்பதியை அகவல் , வெண்பா, கலித்துறை ஆகிய மூவகைப் பாடல்களால் போற்றியுரைத்துள்ளமையால் இது இப் பெயர் பெற்றது. இப்பனுவல் 'திருவளர் பவளப் பெருவரை ' எனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டது . பாட்டியல் மரபுப்படி இதன்கண் 30 பாடல்கள் அமைதல் வேண்டும். எனினும் முதற் பன்னிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. 13 முதல் 30 வரை உள்ள பாடல்கள் ஏடுகளின் சிதைவால் மறைந்திருக்கலாம் எனக் கருத வேண்டியுள்ளது. ஆ. சிங்காரவேலு முதலியார் உரைப்பதிப்பில் இப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன எனினும் இவற்றில் காணப்பெறும் புதிய வழக்குகளால் இவை பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப் பெற்றவை என்று கருதப்பெறுகின்றன.

இப்பிரபந்தத்தின் முதற் பாடலில் சீகாழிப்பெருமான் பெருமாட்டியுடன் தோணி மீது வீற்றிருந்து அருளும் திறம் அழகிய சொல்லோவியமாகப் புனைந்துரைக்கப்பெற்றுள்ளது.

ஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பாலுண்டு எச்சில் பட்டு நிற்கின்றனர். தந்தையார் இதனைக் கண்டு வெகுண்டு நினக்கு இதனைக் கொடுத்தவர் யார் என்று வினவினார்?. ஞானசம்பந்தர் தம் தந்தையை நோக்கி எம்மை யிது செய்தான் இவனே எனக் கையாற் சுட்டி தோடுடைய செவியன் என்னும் தெய்வத் தமிழால் அடையாளங்களுடன் வெளியிட்ட திறத்தை

'அந்தணன் முனிந்து தந்தாரியாரென
அவனைக்காட்டுவன் அப்பவானார்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட்டருளினை ஆங்கே "

என்று உளங்குழைந்து போற்றுகின்றார்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருவிடைமருதூர் என்னும் திருப்பதியினை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை, என்னும் மூவகைப்பாவால் முப்பது பாக்களால் செய்யப்பெற்றதாதலின் இப்பிரபந்தம் இப்பெயர் பெற்றது.

இறைவனின் திருவைந் தெழுத்தினை இ ல்லறம் துறவறம் என்ற இருநெறியினரில் எவர் ஓதினும் இறைவன் அருளில் திளைத்தலுறுதி என்பது அடிகளின் கருத்து.

வலியரால் உயரே வீசி எறிந்து விரைந்து சென்ற கல்லும் வலியற்றவரால் உயரே வீசித் தாமதித்துச் சென்ற கல்லும் நிலத்தின் ஈர்ப்பாற்றலால் நிலத்தின்கண் ஒருங்கே வீழ்தல் போல இறைவனது

திருவைந்தெழுத்தும் தன்னை யோதுவாரின் வன்மை மென்மை கருதாது அனைவருக்கும் ஒப்பவே நலஞ்செய்யும்.

"வல்லா னொருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார் நின் நாமம் நவின்றேரே."

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

அந்தாதித் தொடை அமைய நூறு பாடல்களால் இயன்றது இந்நூல். காஞ்சி நகரிலுள்ள திரு வேகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானைப் போற்றியுரைக்கப் பெறுத லால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதற்கு அடிகளிட்ட பெயர் பதிற்றுப்பத்து என்பதாகும்.

சிவ நெறியைக் கடைபிடித்து ஒழுகாதவர்கள் தோல்வியே அடைவர் என்பது இவர் தம் கருத்து.

"அன்றும் பகையடர்க்கும் பரிமாவும்
மதவருவிக்
குன்றும் பதாதியம் தேரும் குலவிக்
குடைநீழற்கீழ்
நன்றும் பொலியினும் கம்பர் நன்னீறு
நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா
இருநிலத்தே."

என்பது அப்பாட்டு. பகையரசர்களை வெல்லுகின்ற நால்வகைச் சேனைகளை உடையராயினும் கச்சி ஏகம்பனின் திரு நீற்றினைத் தம் நெற்றியில் அணிந்து வழிபாடு செய்யாராயின் அவர்தம் அரசியலாட்சியும் வீரத்தின் அடையாளச் சின்னமாகிய முரசும் இவ்வுலகில் நிலை பெறா என்பது பாடற் கருத்து.

திருவொற்றியூர் ஒருபா வொருது

திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் புகழை விரித்துரைப்பது இந்நூல். ஆசிரியப் பாவாலாகிய பத்துப் பாடல்களால் அந்தாதித் தொடை அமையப் பாடப் பெற்றதாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூற் பாடல்கள் ஒற்றியூர் இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றும் இயல்பின ; உணர்தற்கரிய சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவு பெற விளக்குவன.

இறைவன் எல்லாப் பொருள் களிலும் நீக்கமறக் கலந்து விளங்கு கின்றான். அவனுக்கு இவ்வுலகே உருவம். அப்பேருருவினை விட்டுவிலகி நிற்கும் எப்பொருளும் இவ்வுலகில் இல்லை. ஆதலால் உலகப் பொருள்கள் யாவும் இறைவன் திருஉருவத்தின் அவயங் களாகவே கொள்ளத்தக்கன என்பார். இவ்வுண்மையை அடிகள்

"உருவாம் உலகுக் கொருவனாகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயம்."
என்று கூறுகின்றார்.

சித்தர் பட்டினத்தார்.

பட்டினத்தார் மூவருள் அனைவரும் அறிந்தவர் இவரே ஆவர். காவிரிப் பூம்பட்டினத்தில் தொடங்கி த் திருவொற்றி யூரில் முடிவடையும் வரலாறு இவருடைய வரலாறு என்பது பொதுவான கருத்து. "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற புகழ் மிக்க தொடரைக் குறிப்பிடுபவர் இவரேயாவர். இவர் சித்தர்கள் பலரும் வாழ்ந்த கி.பி. 14 ஆம் நூற்றாண்டினர்.

இவர் உலகியலில் வெறுப்புக் கொண்டு பரம்பொருளினிடத்தில் பேரன்பு கொண்டு அதி தீவிரப் பக்குவம் அடைந்து கடுந் துறவினை மேற்கொண்டவர். துறவு நிலையில் ஞான ஒளி பரப்பியவர்.

மனோன் மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை போலித் துறவினை துறந்தார் என்பர் முற்றும் துறந்தாரல்லர். மறந்தார் சிற்சிலர் எனக் கடிந்துரைப்பர் ஆனால் இவருடைய துறவோ துறவியரும் போற்றும் துறவாக மதிக்கப் பெறுகின்றது. இதனாலன்றோ தாயுமானார்

"பாரனைத்தும்பொய்யெனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும்
துறக்கை யரிதரிது"

எனப் பாராட்டுகின்றார்.

இவருடைய பாடல்களில் பெரும் பகுதி துறவு நெறிப் பாடல்களே. எளிய நடை, அரிய கருத்துக்கள், உவமை, உருவகச் சிறப்புக் கொண்டவை. கற்றாரை யன்றிக் கல்லாதாரையும் எளிதில் ஈர்ப்பன.

பட்டினத்தார் பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ள இவர்தம் பாடல்கள் தொண்டர் சிறப்பினையும் பக்தியின் சாதனைகளையும் விளக்குவதோடு உலக நிலையாமையை எடுத்துரைக்கின்றன. போலிக் கிரியைகளைப் பழித்து ரைக்கின்றன. உண்மை அன்பிற்கு உயர்வளிக்கின்றன.

இவர் உடம்பை ஒரு மரக் கலமாக கற்பனை செய்துள்ளது இன்பம் பயப்பது. உடம்பாகிய மரக் கலம் பாவமாகிய சரக்குகளை ஏற்றிக் கொண்டு பிறவியாகிய கடலில் புகுந்து காமமாகிய காற்று மோதி அலைத்தலால் தீயவழி யாகிய கரையினை அடைவதாகக் கற்பனை செய்கிறார்.

"பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுந் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலம்."

என்ற இக் கற்பனை கோயில் திருவகவலில் மூன்றாம் பாடலில் அமைந்துள்ளது. மனதிற்கு உபதேசம் செய்வது போல உலகிற்கு இவர் செய்யும் உபதேசம் அனைவருக்கும் ஏற்றது.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே
நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே
உபதேசமிதே."

பிற்காலப் பட்டினத்தார்.

இவர் முன்னவர் இருவரினும் வேறானவர். முறையீடு, புலம்பல், இரங்கல், பட்டினத்தார் ஞானம் என்பன இவருடைய படைப்புக்கள். இவர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டினர் என்பது அறிஞர் மு. அருணாசலத்தின் கருத்து.

பாடல்களின் கருத்தோட்டமும் பாடல்களில் பயின்றுள்ள கொச்சைச் சொற்களும் இவரை முன்னவர் இருவரினின்றும் வேறுபடுத்தத் துணை செய்கின்றன. சித்தாந்தக் கருத்துக்களைச் சித்தர் பாணியில் பாடியுள்ளார்.

அருட்புலம்பலில் மௌன நிலையின் பெருமையினைக் கூறுகின்றார். மௌன நிலை என்பது பற்றுக்களை ஒழித்தச் சும்மாஇருக்கும் நிலையாகும். மௌன நிலையில் வாழ வைத்தான் தந்திரத்தை முதலில் அறியாதிருந்தேன், பின்னர் அவன் உண்மையினைத் தெரிந்து கொண்டபின், அம்மா இன்னதுதான் பொருளென்ன என்னைத் தானாக்கிக் கொண்டனன் என்பதனை,

"சும்மா விருக்க வைத்தான்
சூத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென வடைய
விழுங்கினாண்டி."

என்று மொழிகின்றார்.

1. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28:31
2. அருணாசலம் மு.தமிழ் இலக்கிய வரலாறு 10ம் நூற்றாண்டு - பக்.365

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்கள்

1909 - 12	திரு ப. சிங்காரவேற் பிள்ளையவர்கள்
1914 - 16	திரு சங்கரமூர்த்தி முதலியாரவர்கள்
1916 - 21	திரு பண்டித க. சொ. பாலசுப்பிரமணியக் கவிராயரவர்கள்
1916 - 21	திரு கந்தசாமியவர்கள்
1922 - 26	திரு வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளையவர்கள்
1926 - 29	திரு பண்டித ஆர்.பி. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்
1929 - 34	திரு வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்கள்
1934 - 39	திரு வித்துவான் மீ. முத்துச்சாமி பிள்ளையவர்கள்
1939 - 41	திரு வி.ஆர் செல்லப்பா அவர்கள் எம்.ஏ
1941 - 43	திரு பி.ஆர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் எம்.ஏ
1943 - 48	திரு ஆ.வ. இராமநாதஞ் செட்டியாரவர்கள் எம்.ஏ
1948 - 49	திரு க. ஆறுமுக முதலியாரவர்கள் பி.ஒ.எல்
1949 - 50	திரு ஆ.வ. இராமநாதஞ் செட்டியாரவர்கள் எம்.ஏ
1954 - 56	திரு மு. கோவிந்தசாமி அவர்கள் பி.ஒ.எல் (ஹான்ஸ்)
1957 - 61	திரு ஜி. இராமலிங்கன் அவர்கள் எம்.ஒ.எல்.
1962 - 71	திரு வெ.சு. அழகப்பன் அவர்கள் எம்.ஒ.எல்.
1971 - 81	திரு சி. செல்வத்தாண்டவன் அவர்கள் எம்.ஒ.எல்
1981 - 82	திரு மு. கோவிந்தராஜன் அவர்கள்
1982 - 87	திரு பழ. சிதம்பரம் அவர்கள் எம். ஏ. (பொறுப்பு)
1987 முதல்	திரு. முனைவர் பழ. முத்தப்பன் எம்.ஏ. பிஎச். டி.,

சன்மார்க்க சபை நிறைவேற்றுக் கழகம்

தலைவர்	: திரு. சித. பழனியப்பச் செட்டியார்.
துணைத்தலைவர்	: திரு புலவர். சி. சொக்கலிங்கம்
செயலர்	: திரு.ப.சா. சிங்காரம்
பொருளர்	: திரு. வி. முருகப்பன்.
உறுப்பினர்கள்	: திரு. முனைவர். க. தியாகராஜன்.
	திரு. கவிஞர். சே. கனகசபை
	திரு. புலவர் ராம. சிங்காரம் செட்டியார்
	திருமதி. சித. ஏகம்மை.
	திரு. அ. சாமிநாதன்.
	திரு. இராம. இலக்குமணன்
	திரு. முனைவர். பழ. முத்தப்பன்.
	(முதல்வர் பதவி வழி உறுப்பினர்)

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி குழுவினர்

தலைவர்	: திரு. சித. இராமலிங்கம்
செயலர்	: திரு வி. பழநியப்பன்
துணைச் செயலர்	: புலவர் சித. சுப்பிரமணியன்
உறுப்பினர்கள்	: திரு சி. நாகப்பன்
	திரு பழ. நாகப்பன்
	திரு அ. சிதம்பரம்
	திரு அழ. சாமிநாதன்
	திரு வீர.கா. காசிவிசுவநாதன் செட்டியார்
	திரு லெ. நாராயணன்
	திரு முனைவர் பழ. முத்தப்பன்
	திருமதி. முனைவர் ந. இராமாயி
	திரு. பழ. சிதம்பரம்
	திரு. முனைவர் சேஷாத்திரி
	(பல்கலைக் கழகச் சார்பாளர்)

கணேசர் செந்தமிழ் மாலை நேரக் கல்லூரிக் குழு

தலைவர் : திரு. சித. இராமலிங்கம்
செயலர் : திரு.ப.சா. சிங்காரம்
உறுப்பினர்கள் : திரு. வி. முருகப்பன்.
திரு. சி. நாகப்பன்.

கணேசர் செந்தமிழ்த் தொடக்கப் பள்ளிக் குழு

தலைவர் : திரு. சித. இராமலிங்கம்.
செயலர் : திரு.வி. பழநியப்பன்
துணைச் செயலர் : திரு சித. சுப்பிரமணியன்
உறுப்பினர்கள் : திரு. பழ. சாமிநாதன்
திரு. அ. சிதம்பரம்
திரு. இராம. இலக்குவணன்
திரு. ஆர். நாராயணன்.
திரு. ஆர். தட்சிணாமூர்த்தி.

கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளிக் குழு

தலைவர் : திரு. சித. இராமலிங்கம்
செயலர் : திரு.வி. பழநியப்பன்
துணைச்செயலர் : திரு. சித. சுப்பிரமணியன்
உறுப்பினர்கள் : திரு. சி. சாமிநாதன்
திரு. மு. விசுவநாதன்
திருமதி. லெக்ஷ்மி அம்மாள்

உயர்மட்டக் குழு

தலைவர்	:	திரு. ப.சா. பழநியப்பசெட்டியார்
உறுப்பினர்கள்	:	திரு. சா. அண்ணாமலை செட்டியார்
	:	திரு. சித. பழநியப்பசெட்டியார்
	:	திரு. வீர. காசிவிசுவநாதன் செட்டியார்

கட்டிடக் குழு

திரு. சித. பழநியப்பசெட்டியார்
திரு. வி. முருகப்பன்
திரு. வீர. காசிவிசுவநாதன் செட்டியார்

வளர்ச்சிக் குழு

தலைவர்	:	திரு. சா. அண்ணாமலை செட்டியார்
உறுப்பினர்கள்	:	திரு. சித. பழனியப்பச் செட்டியார்
	:	திரு. ப. சா. சிங்காரம் செட்டியார்
	:	திரு. சி. நாகப்பன் செட்டியார்
	:	திரு. வி. பழனியப்பன் செட்டியார்

முத்துவிழாக் குழு

தலைவர்	:	திரு. சித. பழநியப்பச் செட்டியார்.
செயலர்	:	திரு. ப.சா. சிங்காரம்
உறுப்பினர்கள்	:	திரு. சா. அண்ணாமலைச் செட்டியார்.
		திரு. ப.சா. அழகப்பச் செட்டியார்.
		திரு. சித. இராமலிங்கம்.
		திரு. வி. முருகப்பன்.
		திரு. சி. நாகப்பன்.
		திரு. வி. பழனியப்பன்.
		திரு. அ. சாமிநாதன்
		திரு. சி. சாமிநாதன்
		திரு. பழ. முத்தப்பன்.
		திரு. பழ. சிதம்பரம்.





எங்கள் வாழ்வும்

வளமும்

சன்மார்க்க சபையே எனப்

போற்றிப் பணிகின்றோம்...

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

மற்றும்

மாலை நேரக் கல்லூரி

முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள்

மேலைச்சிவபுரி